Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+4

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 365

ஞாயிற்றுக்கிழமை 26 நவம்பர் 2023

கார்த்திகை 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மாவீரர் நாளுக்கு தடைவிதிக்க கிளி., மன். நீதிமன்றுகள் மறுப்பு

## சிறிலங்கா பொலிஸாரின் மனுக்கள் தள்ளுபடி

**கிளிநொச்சி, நவம்பர் 26**

**தமிழர் தாயகத்தில் மாவீரர் நாளை கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் தமிழ்த் தேசியத் தரப்புகளால் பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றைக் குழப்புவதற்கு - தடைபோடுவதற்கு சிறிலங்கா பொலிஸார் தாக்கல் செய்த மனுக்களை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளன. நினைவேந்தலுக்குத் தடை விதிக்க மறுத்துள்ளன.**

»15

## ஜனவரியில் பாதி உயர்வு

கொழும்பு, நவ. 26

ஜனவரி மாதம் முதல் அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தில் 5 ஆயிரம் ரூபாவையும், ஓய்வூதியத்தில் 2 ஆயிரத்து 500 ரூபாவையும் உயர்த்துதுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
130,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## நினைவுக் கல்வெட்டுகள் வாகரையில் அடித்துடைப்பு

மட்டக்களப்பு, நவ. 26

போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் மட்டக்களப்பு வாகரை கண்டிலடியிலுள்ள மாவீரர் நினைவு கல்வெட்டுகள் நேற்றுமுன்தினம் இரவு அடித்து நொருக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-இ)

## மாவீரர் பெற்றோருக்கு உணவளித்தவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது

மட்டக்களப்பு, நவ. 26

மாவீரர் பெற்றோருக்கு உணவு வழங்கிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உப தலைவர் என்.நகுலேஸ், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வெல்லாவெளிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-இ)

வட்டுக்கோட்டையில் நேற்று

## மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

வட்டுக்கோட்டையில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பும் மாவீரர் நினைவேந்தலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளைத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் ஏற்பாட்டில் தொகுதிக் கிளைச் செயலர் »15

## தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

கொழும்பு, நவ. 26

மோசடியான விசாக்களை பயன்படுத்தி ஒஸ்திரியாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற »15

அபுதாபியில்

## கட்டடத்தால் வீழ்ந்தவர் தெல்லிப்பழையில் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 26

அபுதாபியில் பணியாற்றும் போது மூன்றாம் மாடியிலிருந்து வீழ்ந்து கோமாவிலிருந்தவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை, சித்தியம் புளியடியைச் சேர்ந்த முருகேசு விஜயரத்தினம் (வயது - 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 10 திகதி அபுதாபியில் மூன்றாம் மாடியிலிருந்து »15

சித்தன்கேணி இளைஞன் சாவு!

## 4 பொலிஸார் மறியலில்!

யாழ்ப்பாணம், நவ. 26

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நாகராசா அலெக்ஸ் (வயது -25) என்ற இளைஞர் சித்திரவதைக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதான 4 பொலிஸாரையும் எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்கு தயார்படுத்துமாறும் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

மேலும் ஒரு அதிகாரியை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-26)

கொக்குத்தொடுவாய்

## புதைகுழி அகழ்வில் 5 எலும்புக்கூடுகள்

முல்லைத்தீவு, நவ. 26

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி நேற்று அகழப்பட்டபோது 5 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள், துப்பாக்கிச் சிதறல்கள், சின்னங்கள், கையில் அணியப்படும் இலக்கத்தகடு, மணிக்கூடு என்பன மீட்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரி க.வாசுதேவா தெரிவித்தார். (அ-ஒ-19)

## விபத்தில் பெண் சாவு!

கிளிநொச்சி, நவ. 26

முச்சக்கரவண்டி மோதியதில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பளையைச் சேர்ந்த குணாளன் மதுசா (வயது -19) என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். »15

## தலைவர் பிரபாகரனின் பிறந்ததினம் இன்று



### வடக்கு - கிழக்கில் படைகளின் கெடுபிடிகள் வழமைபோன்று அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழ் மக்கள், தமது தாயகத்தில் சகல உரிமைகளோடும், சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடிய, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள் இன்றாகும். »15


சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் பல வீதிகளில் கால்நடைகளால் விபத்து

## மக்கள் குற்றச்சாட்டு



**மன்னார், நவ. 26**

**மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள பிரதான வீதிகள் மற்றும் உள்ளூர் வீதிகளில் அலைந்து திரியும் கால்நடைகளால் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் பல வீதிகளிலும் நூற்றுக்கணக்கான கால்நடைகள் இரவு-பகலாகப் படுத்துறங்குவதுடன் பட்டி பட்டியாக வீதிகள் தோறும் அலைந்து திரிகின்றன.

இதனால் அவசரத் தேவையாகச் செல்லும் அம்புலன்ஸ்கள், நெடுந்தூரம் மற்றும் குறுந்தூரப் போக்குவரத்து பஸ்கள், உரிய நேரத்தில் செல்லமுடியாமல் தாமதம் ஏற்படுகின்றது. அத்துடன் விபத்துச் சம்பவங்களும் அதிகளவில் இடம்பெறுகின்றன. வீதிகளில் அலைந்துதிரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேசசபையினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-213)

# வலிகாமம் பிரதேசங்களில் திருடப்படும் கால்நடைகள்

## கால்நடைவளர்ப்பாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 26

கோப்பாய், நீர்வேலி உள்ளிட்ட பிரதேசங்களில் வளர்ப்புக் கால்நடைகள் திருட்டு அதிகரித்துள்ளன என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் பொதுமக்களின் குடியிருப்புகள் மற்றும் தோட்டக் காணிகளில் கட்டிவிடப்படும் கால்நடைகளே களவாடப்படுகின்றன.

கடந்த வாரமும் நீர்வேலி தெற்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் கட்டப்பட்டிருந்த பசுமாடு ஒன்று களவாடப்பட்டுள்ளது.

பல லட்சம் பெறுமதியான கால்நடைகள் களவாடப்படுவதால் எமது வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகின்றது. எனவே உரிய அதிகாரிகள் கால்நடைத் திருட்டைக் கட்டுப்படுத்த வழிவகுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச-17)



# மருதோடை மாணவி பரீட்சையில் சாதனை

வவுனியா, நவ. 26

வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மருதோடை அ.த.க. பாடசாலை மாணவி அ.மிதுனா தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலாக 148 புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ரி-75)

# சூடு பிடிக்கிறது சிட்டி விற்பனை

யாழ்ப்பாணம், நவ. 26

திருக்கார்த்திகையை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் சிட்டி விளக்குகளின் விற்பனை நேற்றுச் சனிக்கிழமை சூடு பிடித்துக் காணப்பட்டது.

யாழ்.நகர், திருநெல்வேலி உள்ளிட்ட பல இடங்களிலும் சிட்டி விளக்குகள் வாகனங்களில் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகின்றன. வன்னிப் பிரதேசத்தில் இருந்து கூடுதலாக எடுத்துவரப்படுகின்றன. சிட்டி விளக்கொன்று 5 ரூபா முதல் விற்பனை செய்யப்படுகிறது. (ச-17)



# முல்லைத்தீவுக்கு மேலதிக மாவட்ட செயலர் நியமனம்

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவில் மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய க.கனகேஸ்வரன் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றத்தையடுத்து முல்லைத்தீவு காணிப்பிரிவின் மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றி வந்த சி.குணபாலன் முல்லைத்தீவில் மேலதிக மாவட்டச் செயலராக கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்றார். (ரி-75)

# யாழ்.ஆலயங்களில் பிள்ளையார்கதை

யாழ்ப்பாணம், நவ. 26

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதையை முன்னிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து 21 நாள்கள் பிள்ளையார்கதை படிப்பும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

+++ +++

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார்கதை உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21தினங்கள் காலை 8 மணிதொடக்கம் நடைபெறவுள்ளது. (ச-17)

+++ +++

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார்கதை உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று பிற்பகல் 4 மணிக்கு உருத்திரா அபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-17)

# மாணிக்கக்கல் திருட்டு; சீனப் பெண் தலைமறைவு

கொழும்பு, நவ.26

கொழும்பு, கறுவாத்தோட்டத்தில் மாணிக்கக்கல் விற்பனை நிலையத்தில் இருந்த 85 இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கல்லைத் திருடினார் என்று குற்றம்சாட்டப்பட்ட சீனப்பெண் தலைமறைவாகி உள்ளார் என்று கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகி உள்ளவர் குறித்த மாணிக்கக்கல் விற்பனை நிலையத்தில் பணிபுரியும் சீனப்பெண் ஆவார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# ஓய்வு பெறுகின்றாரா பொலிஸ்மா அதிபர்?

கொழும்பு, நவ.26

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்புக் காலம் நேற்றுடன் முடிவடையும்நிலையில்புதியபொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிக்க அரசாங்கத்துக்குள் ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு மூன்றாவது முறை வழங்கப்பட்ட சேவை நீடிப்பு இந்த மாதம் ஆரம்பத்தில் நிறைவடைந்திருந்த நிலையில் அவருக்கு மேலும் 3 வாரங்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சி.டி.விக்ரமரத்னவின் பொலிஸ்மா அதிபர் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது என்று அரசாங்கம் கூறியிருந்தது.

சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் இதற்கு முன்னதாக இரண்டு முறை, தலா 3 மாதங்கள் என்ற அடிப்படையில் நீடிக்கப்பட்டது. அதை அரசமைப்புச் சபையும் அங்கீகரித்திருந்தது.

இறுதியாக ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சேவை நீடிப்புக்கு அரசமைப்புப் பேரவையின் ஒப்புதல் பெறப்படவில்லை என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்தன. தற்போது சேவை நீடிப்பு நிறைவடைந்துள்ள நிலையில் அவர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகின்றார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூவரிடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது என்று அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், புதிய பொலிஸ்மா அதிபருக்கான பெயர்கள் அரசமைப்புப் பேரவைக்கு முன்மொழியப்படவில்லை.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான தேசபந்து தென்னக்கோன், லலித் பதிநாயக்க மற்றும் நிலந்த ஜயவர்த்தன ஆகியோரில் ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்களில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கே அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றும் அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸுக்குக் கடத்தப்படும் வடக்கு - கிழக்கு சிறுவர்கள்!

## விசாரணையில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, நவ.26
மலேசியா ஊடாகப் பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவுக்கு இலங்கைச் சிறுவர்கள் கடத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
இவ்வாறு மொத்தம் 13 குழந்தைகள் மலேசியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;
இலங்கைச் சிறுவர்கள் மலேசியா ஊடாக வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுகின்றனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆள்கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் குடிவரவு-குடியகல்வுத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.
நடத்தப்பட்ட விசாரணையில், வடக்கு - கிழக்கில் வசிக்கும் 18 வயதுக்குட்பட்ட தமிழ்ச் சிறுவர்கள் மலேசியாவுக்கு அனுப்பப்படுவது கண்டறியப்பட்டது.
இந்தச் சிறுவர்கள் இலங்கையிலிருந்து மலேசியா செல்வதற்குச் சட்டபூர்வமான கடவுச்சீட்டைப் பயன்படுத்துகின்றனர் என்றும், மலேசியாவில் போலிக் கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவுக்கு அனுப்பப்படுகின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது.
இவ்வாறு சுமார் 13 சிறுவர்கள் இலங்கையிலிருந்து மலேசியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்பதும், இதில் இடைத்தரகர் கடத்தல்காரர் ஒருவரே ஈடுபட்டுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.
குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் மனிதக் கடத்தல், ஆள்கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றுள்ளது. (எ-இ)

## மின் துண்டிப்புக் கட்டணத்தை குறைப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, நவ.26
மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டு மீண்டும் இணைக்கப்படும்போது அறவிடப்படும் 3 ஆயிரம் ரூபா என்ற கட்டணத்தை மின்சாரப்பட்டியல் கட்டணத்துக்கு ஏற்ப குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் இடம்பெற்ற பாதீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கருத்துரைத்த, வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஆயிரம் ரூபா அல்லது 500 ரூபா என்ற மின்சாரப்பட்டியல் கணக்கைக் கொண்ட பாவனையாளர்களுக்கும் மின்சாரத்தைத் துண்டித்து மீள இணைக்கும்போது 3 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. பணியாளர் சபைக் கூட்டத்தில் அந்தக் கட்டண முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீள இணைப்பதற்கு அறவிடப்படும் கட்டணத்தை, மின்சாரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்துக்கு ஏற்ப அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வடக்கு, கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை மிகவும்பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.
இன்று ஞாயிற்றுக்கிழமை வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்குத்தெற்காக காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.
அது எதிர்வரும் 29ஆம் திகதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக உருவாகி வடமேற்குத்திசைநோக்கி நகரும் வாய்ப்புள்ளது.
தற்போதைய மாதிரிகளின் கணிப்பின்படி இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களூடாகவே நகரும் வாய்ப்புகள் உள்ளன.
ஆயினும் இது உருவாகும் காலப்பகுதியில் நிலவும் வளிமண்டல வெப்பநிலை, சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை, காற்றழுத்தத்தாழ்வு நிலையின் அமுக்க சாய்வுத் தன்மை மற்றும் தாழ்வு நிலைக்குக் கிடைக்கும் மறை வெப்ப சக்தி என்பவற்றைப் பொறுத்து நகரும் திசை மாற்றமடையலாம் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

# ஜனாதிபதித் தேர்தலை ஓகஸ்ட் நடத்தத் திட்டம்

கொழும்பு, நவ.26
**அடுத்த வருடம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஆளும் கட்சி தயாராகி வருகின்றது.**
அரசமைப்பின் பிரகாரம் அடுத்த ஆண்டு நவம்பர் மாத இறுதிக்குள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். பொதுத் தேர்தல் 2025ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் நடத்தப்படவேண்டும். இருப்பினும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதில் ஆளும் கட்சி கவனம் செலுத்தியுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக முன்னிறுத்துவது தொடர்பாகவும் பொதுஜன பெரமுனவுக்குள் ஆலோசிக்கப்படுகிறது.
வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெற்ற பின்னர், சிறிலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள், ஆதரவுக் குழுக்களுடன் இது தொடர்பான வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கான பேச்சை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்க உள்ளார் என்று ஆளுங்கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது. (எ-இ)

# கப்பல்களின் மூலம் 200 மில்லியன் டொலர்

கொழும்பு, நவ.26
இலங்கைக் கடற்பரப்பிற்கு அருகில் பயணிக்கும் கப்பல்கள் மூலம் நாட்டுக்கு வருடாந்தம் சுமார் 200 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டும் வகையில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை உருவாக்க தேசிய நீரியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.
நாரா நிறுவனத்துடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்போதுள்ள கடல்சார் வரைபடங்கள் பிரித்தானிய நீரியல் அலுவலகத்தால் செயற்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை உருவாக்கும் பொறுப்பைக் கடற்படையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# கோப் குழுத் தலைவரை நீக்குவதற்கு இணக்கம்!

கொழும்பு, நவ.26
ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளில் இருந்து அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவர் ரஞ்சித் பண்டாரவைநீக்குவதற்குநாடாளுமன்றில் அனைத்துக்கட்சித் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.
கோப் குழுவின் மற்றுமொரு உறுப்பினரின் தலைமையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மீதான விசாரணைகளைநடத்தவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஆயினும் ரஞ்சித் பண்டார மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இதை மேற்கொள்ளவேண்டும் என சபாநாயகர் அறிவுறுத்தியுள்ளார்.
இதேவேளை, கோப் குழுவின் தலைவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர இருந்தது. அது தாமதமாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சஜித்துக்குத் தடை விதிக்க நாடாளுமன்றில் பிரேரணை

கொழும்பு, நவ.26
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு இரண்டு வாரகாலம் நாடாளுமன்ற சபை அமர்வில் பங்கேற்க தடைவிதிக்கும் தீர்மானம் ஆளுங்கட்சியால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அநாகரீகமான வார்த்தைகளால் திட்டினார் என்று எழுந்த குற்றச்சாட்டின் பேரில் சஜித் பிரேமதாஸவுக்கு எதிரான இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலஸ்வத்த இந்தப் பிரேரணையை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சபையில் முன்மொழிந்ததுடன், ஆளுங்கட்சியின் முழு ஆதரவுடன் வாக்கெடுப்பின்றி பிரேரணை நிறைவேற்றப்பட்டது.




என்றாலும், இது தொடர்பில் சபாநாயகர் எவ்வித அறிவிப்பு களையும் வெளியிடவில்லை. விரைவில் இது தொடர்பில் அவர் அறிவிப்பொன்றை வெளியிடுவார் என ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 . 06 . 1949



ஆண்டவன் மடியில் 25 . 11 . 2023

## றொகேசன் கொன்சன்ரையின் குலசிங்கம் (குலம்)

நெடுந்தீவை பூர்வீகமாகவும் மருதடி வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய றொகேசன் சுவாமி நாதர் குலசிங்கம் நேற்று (25.11.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான றொகேசன் சுவாமிநாதர் அல்வீன்அம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலம்சென்றவர்களான சாமுவேல் தம்பிஜயா அகத்தம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற றெஜினா செல்வராணி (மலர்) அவர்களின் அன்புக் கணவரும், சிந்துஜாவின் பாசமிகு தந்தையும், தனுஜனின் மாமனாரும், அமரர்களான யோசப், றெனிஸ்லெஸ், பிறன்சிஸ், மரியராணி, புஸ்பராணி, அன்ரனிபிள்ளை மற்றும் புஸ்பராணி (பாக்கியவதி) பேனடேற் (யோகவதி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர்களான மேரிஅனா, மேரி மர்களின் பெனடிக்ற் மற்றும் சின்னமலர், றேசபெல், சிவாநந்தராஜா, அன்ரனிபிள்ளை, புஸ்பராணி, காலஞ்சென்ற மரியநாயகம், சாள்ஸ் குணநாயகம் ஆகியோரின் மைத்துனரும், யொனதன், கெய்டன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.11.2023) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித திரேசாள் ஆலயத்தில் மு.ப. 10.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27089) A-1

# இளவயதில் நீதிபதிகளான வடக்குப் பெண்கள் இருவர்!

யாழ்ப்பாணம், நவ.26

இலங்கை நீதித்துறை வரலாற்றில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த பெண்கள் இருவர் இளவயதில் நீதிபதிகளாகப் பதவியேற்றுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நீதிபதிகளுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத் தேர்விலும் இவர்கள் தெரிவாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 31 வயதான மாதுரி நிரோசனும், வவுனியாவைச் சேர்ந்த 33 வயதான மஞ்சுளா அமிர்தலிங்கமுமே நீதிபதிகளாகத் தெரிவாகியுள்ளனர்.

மாதுரி நிரோசன் யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பழைய மாணவியாவார். மஞ்சுளா அமிர்தலிங்கம் வவுனியா இறம்மைக்குளம் மகளிர் கல்லூரி பழைய மாணவராவார். இளவயதில் தெரிவாகிய இருவருக்கும் பலரும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துவருகின்றனர். (ஏ-18)






**உடனடி வேலைவாய்ப்பு**

வடமாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கம்பனிக்கு முகாமையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை.

0761124145

**ஊர்ச் சேவல்கள் விற்பனைக்கு**

100 ஊர்ச் சேவல்கள் பளையில் விற்பனைக்குண்டு.
மொத்தமாகவும், பிரித்தும் பெற்றுக்கொள்ளலாம்.

0773973166

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குலம் (V), 1984 பூசம், London மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

077 443 7326
077 040 2658

**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்களும், குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 659 2044

**வீடு/அறை வாடகைக்குண்டு**

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில், சகல வசதிகளும் கொண்ட வீடு/அறை வாடகைக்குண்டு.


தொடர்பு: 077 833 6848

**தேவை**

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
1.உதவி முகாமையாளர் (அரச/அரச சார்பற்ற 10 வருட அனுபவத்துடன், ஓய்வு நிலையில் உள்ளோரும் விண்ணப்பிக்கலாம்)
2.வெளிக்கள உத்தியோகத்தர் தேவை.

077 896 0281


# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் பாலசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலசிங்கம் அவர்கள் கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஆனந்தர் நீலாயதாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகலட்சுமியின் அன்புக் கணவரும், சண்முகநாதன், சிவலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும், நிலானி (ஆசிரியர், வட்டு மத்திய கல்லூரி), நிரூபன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிதரன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், கணிதம், தென்மராட்சி கல்வி வலயம்), கஜனி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயகி சாருஜன், ஹஸ்விகா, தனுஷிக், யதுன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2023) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிளாக் வீதி, சங்கானை.
021 225 0254,
077 958 2541

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41235) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 11 . 1955



மறைவு 24 . 11 . 2023

## திருமதி றாகினி தவேந்திரன்

(ஓய்வு நிலை ஆசிரியை)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி றாகினி தவேந்திரன் அவர்கள் கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தங்கவடிவேல் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், தவேந்திரன் (ஓய்வு நிலை ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் ம.கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், செந்தியா, றஜீதன், தனீஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜதீஷன், றஜீதா ஆகியோரின் மாமியாரும், தருண், ஆரவ், ஶ்ரீனிகா, மதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மாலினி, சுபாசினி, நளாயினி, உதய குமார், சிறீதரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், சுரேந்திரன், மகேந்திரன், சியாமளாதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.11.2023) செவ்வாய்க்கிழமை அன்று நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"உதய தாரகை"
மீசாலை மேற்கு,
மீசாலை
077 910 3340

த.தவேந்திரன் (கணவர்)
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

CR 41236 (S-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய இழுவைப் படகை உடன் தடைசெய்யுங்கள்

## முல்லையில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, நவ. 26

வடக்குக் கடலில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களால் எமது கடல் வளம் அழிவதைத் தடுத்து வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துமாறு கோரி முல்லைத்தீவு கடற்றொழில் அமைப்புகள், மீனவர்கள் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்கான மனுவொன்றும் போராட்டக்காரர்களால் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் உள்ளதாவது:-

கடந்த பத்து வருடங்களாக இந்திய இழுவைமடிப்படகுகள் அத்துமீறிய எல்லைதாண்டிய சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது கடல் வளம் சூறையாடப்படுவதுடன் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் முற்றாக அழிக்கப்படுகிறது. கடற்றொழிலாளர்கள் வாழ்வா , சாவா எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை எமது எதிர்காலச் சந்ததியினரை ஒழிப்பதற்காக உயிரைக்கொல்லும் சட்டவிரோத போதைப் பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன.

இந்தச் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடருமானால் நாம் எமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து யாருமற்ற ஏதிலிகளாகச் சாவதைவிட எமக்கு வேறு வழியில்லை.

ஆகவே இனியும் தாமதிக்காது இந்தச் சட்டவிரோதச்செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்- என்றுள்ளது. (ச-19)



# மாற்றுத் திறனாளிகளுக்கு விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 26

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய்ப் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை பி.ப 2மணிக்கு பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது. (ரி-66)

# தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறப்புற நடந்த முத்தமிழ்விழா

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முத்தமிழ்விழா கல்லூரி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை காலை மற்றும் மாலை அமர்வுகள் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி.சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் காலை அமர்வில் பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன், இலங்கை வங்கி யாழ்ப்பாண இரண்டாம் கிளையின் முகாமையாளர் எ.சந்தனு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் செயலாளர் இ.பகீரதன், தொழிலதிபர் பொன்னையா கிருஷ்ணானந்தன் ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மாலை அமர்வில் தென் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி க.ரகுபரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி சி.சிவன்சுதன், கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி நரேந்திரா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன், முன்னாள் ஆசிரிய மாணவி காயத்திரி அகிலன் ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ரி-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடும் முன் ஒருமுறைக்குப் பலமுறை சிந்திக்க வேண்டியது அவசியம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை உறவினர்களால் செலவுகள் ஏற்படும். என்றாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும் நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்குப் பக்கபலம் கிடைக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** குடும்பத்தில் தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும் நல்ல நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** தேவையற்ற குழப்பங்கள் மனதில் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். நண்பர்களுடன் பேசுவது ஆறுதல் தரும்.

**துலாம்:** மனதில் துணிச்சலும் தன்னம்பிக்கையும் நிறைந்திருக்கும் நாள். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

**விருச்சிகம் :** சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** நாள் முழுவதும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம் :** தேவையான பணம் கையில் இருந்தாலும், குடும்பத்தினரால் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். முன்னேற்பாடுகளுடன் வெளியில் செல்லவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். சிலருக்கு இளைய சகோதரர்கள் மூலம் பணவிரயத்துக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** தொடங்கும் காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.



# கவணாடல், வேடுவ நடனம் வண்ணை நாவலர் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 26

தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பரத நாட்டியப் போட்டியில் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

பெண்களுக்கான கவணாடல் குழு நடனத்திலும் ஆண்களுக்கான வேடுவ நடனத்திலுமே தேசிய மட்டத்தில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் முதலிடம் பிடித்துள்ளது.

இந்த ஆற்றுகைகளை பாடசாலை நடன ஆசிரியர் சுஜீவா ரங்கநாதன் நெறிப்படுத்தியிருந்தார். குரலிசையை திருமதி சசீலா கேசவன் வழங்கியிருந்தார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காலம் கொடுத்த மீட்பர்

மீட்பர்கள் பற்றிய ஏக்கங்களும், கனவுகளும் அடக்கி ஒடுக்கப்படும் எல்லோரிடத்தும் இயல்பாகவே எழும். வரலாற்றின் அநேக பக்கங்கள் இந்த ஏக்கங்களால்தான் நிரப்பப்பட்டிருக்கும். ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மீட்பர்கள் வருவதில்லை. 'எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் நான் அவதரிப்பேன்' எனச் சொன்ன கிருஷ்ண பரமாத்மா கூட யுகக்காத்திருப்புக்குப் பின்னரே தன்னுடைய அவதாரங்களை நிகழ்த்தினார். ஆனால், அந்த அவதாரங்கள் எல்லாமே, மக்களின் துயர் துடைப்பையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அத்தோடு அந்தப் பிறப்பெடுப்புகள் நடந்த தருணமும் ஆபத்துகளால் சூழப்பட்டிருந்தது. கம்சன் என்ற கொடூரமான மன்னனின் கழுகுப்பார்வைக்கு நடுவே சிறைக்கூடத்தில் தான் கிருஷ்ணன் அவதரித்தான். சுற்றிலும் ஆயுதங்களோடு காவலர்கள். வெளியே செல்லத் தடை. எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்ட வாசுதேவரும் , தேவகியும் அடைக்கப்பட்ட குறுகலான இடத்தில்தான் மீட்பரான கண்ணனின் கால்தடம் பதிந்தது. அந்த யுகம் கண்ணனுக்கானது. அதனால் காலம் அவனைக் காப்பாற்றியது. அவன் மக்களைக் காப்பாற்றினான். அவ்வாறு இருளடர்ந்த காலத்தில் கண்ணன் பிறந்தாலும் , அவனது அவதரிப்பின் பின்னர் ஒளி பிறந்தது. அதனால் கண்ணனின் பிறந்ததினத்தை இப்போதும் கிருஷ்ணஜெயந்தி என இந்துக்கள் கொண்டாடி மகிழத் தவறுவதில்லை.

இந்துமதத்தில் மட்டும்தான் மீட்பர்கள் பிறப்பெடுத்தார்களென்றில்லை. கிறிஸ்தவ மக்களின் மீட்பரான இயேசு கிறிஸ்துவும் கண்ணனைப் போலவே, ஆபத்துகள் நிறைந்த தருணத்தில் தான் பிறப்பெடுத்தார். கண்ணனுக்கு கம்சனைப் போல, இயேசுவுக்கு ஏரோது மன்னன். 'யூதர்களின் ராஜா' பிறப்பெடுக்கப் போகிறார் என்ற அச்சத்தில் அவன் நாட்டில் உள்ள அத்தனை சிசுக்களையும் கொன்றொழித்தான். அப்படியிருந்தும் தப்பிப் பிழைத்து, மாட்டுத் தொழுவத்தில் தஞ்சமடைந்த யோசேப்– மரியாள் தம்பதியருக்கு , இராப்பொழுதில் வானில் வழிகாட்டி நட்சத்திரங்கள் சூழ்ந்திருக்க இயேசு அவதரித்தார். அவரது அவதரிப்பை வானில் தோன்றிய நட்சத்திரங்கள் மூலம் கண்டறிந்த ஞானிகள் சிலர், அந்த நட்சத்திரங்களை வழிகாட்டியாகக் கொண்டு குழந்தை இயேசுவைக் கண்டு மகிழ்ந்தனர் என கிறிஸ்தவ மதம் கூறுகின்றது. அதன் பின்னர் இயேசு மக்களின் மீட்பராக மாறினார், தான் நேசித்த மக்களுக்காகவே தன்னுயிரை ஈந்தார். ஆனாலும் இயேசு மீண்டும் உயிர்த்தார் என்று கிறிஸ்தவ மக்கள் நம்புகின்றனர். அவரது சாவு பற்றியும், உயிர்த்தெழல் பற்றியும் இன்னும் மர்ம முடிச்சுகள் இருக்கவே செய்கின்றன. தன் மக்களுக்காகவே வாழ்ந்த இயேசுவின் பிறப்பை மீட்புத் திருநாளாக, கிறிஸ்மஸ் பண்டிகையாக உலகமக்கள் கொண்டாடித் தீர்க்கிறார்கள்.

நாமும் நமக்கோர் மீட்பரைப் பெற்றிருந்தோம். யுகங்கள் பல தவமிருந்தாலும் கிடைத்தற்கரிய மீட்பர் அவர். எல்லா மீட்பர்களையும்போலவே அவரது பிறப்பும் ஒரு மாரிகாலப் பொழுதில் , அடக்குமுறைகள் உச்சமடைந்த தருணத்தில் தான் நிகழ்ந்தது. மற்றைய மீட்பர்களுக்கு வந்த ஆபத்துகளைப்போலவே இவருக்கும் ஆபத்தே வாழ்க்கையானது. அந்த மீட்பர்களை எப்படிக் காலம் காப்பாற்றியதோ அப்படியே இவரையும் காப்பாற்றியது. தன்னலத்தை விடுத்து, தன் சிந்தனை, சொல், செயல் என எல்லாவற்றையும் மக்களுக்காகவே அர்ப்பணித்தார். அவர் பிறப்பின் பின்னர் நமது இனம் தலை நிமிர்ந்தது. சங்ககாலம் திரும்ப, புதிய புறநானூறை அவர் படைக்கத் தொடங்கினார். முப்பது வருடங்களுக்கும் மேலாக தமிழினத்தின் தலைமகனாக வழிநடத்தினார். உலகமே வியந்து பார்க்குமளவுக்கு போரியல் நுட்பங்களை உருவாக்கினார். தொலைந்துபோன தமிழினத்தின் உரிமையையும், நிலத்தையும், மகிழ்வையும், வாழ்வையும் மீட்டெடுத்தார். அந்த மீட்பருக்கு இன்று வயது 69. எம்மினத்துக்கு இன்றுதான் கிருஷ்ணஜெயந்தி, கிறிஸ்மஸ் எல்லாமே. யுகபுருஷர்களின் வருகை எல்லா இனத்துக்கும் கிடைப்பதில்லை. நம்மினத்துக்கு காலம் அப்படி ஒரு மீட்பரைக் கொடுத்திருந்ததை எண்ணி கொண்டாடித் தீர்ப்போம்.

வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2023

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்கவேண்டும்."

-தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி)-






## ஜி.எஸ்.பி. தகைமைகளை நிறைவேற்றாத இலங்கை

### மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, நவ.26**

**ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக சலுகையான ஜி.எஸ்.பி. பிளஸ் என்ற பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத் தேர்வுகளுடன் இணைக்கப்பட்டுள்ள தமது கடமைகளில் இருந்து இலங்கை மிகவும் கீழ்நிலையில் உள்ளது என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

2019ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பொருளாதாரம் ஒவ்வொரு ஆண்டும் சுருங்குகிறது. எனினும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளன. இது அவநம்பிக்கையான பொருளாதார காலங்களில் முக்கியமான வருமானத்தை இலங்கைக்கு வழங்குகின்றது என்றும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையே இதற்கு முக்கியமான காரணமாகும். எனினும் ஐரோப்பிய ஒன்றியம், அண்மையில் வெளியிட்ட புதிய அறிக்கைக்கு அமைய, இலங்கை அரசாங்கம் தமது இலக்கை விட மிகவும் பின்னோக்கியே உள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, ஒன்று கூடல் மற்றும் சிவில் சமூகத்தின் எதிர்ப்புகள் என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது முதல், பெரும் அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் தொடர்பில ஐரோப்பிய ஒன்றியத்துக்கான முக்கியமான உறுதிமொழியை அரசாங்கம் இன்னும் செயற்படுத்தவில்லை என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முன்மொழிந்துள்ள போதிலும், இது உரிமைகள் தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை எனவும் அந்தக் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## "டோர் டூ டோர்" விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, நவ.26

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பொருள்கள் விநியோக "டோர் டூ டோர்" முறையைத் தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு இலங்கை சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டினர் இந்தமுறையின் மூலம் இலங்கைக்குப் பல்வேறு பொருள்களை அனுப்புகின்றனர். இந்தப் பொருள்கள் தனியார் பொருள்கள் சேவை நிலையங்கள் மூலமாக அந்த நபர்களின் வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. இந்தச் சேவையூடாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கை, மோசடிகள் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக "டோர் டூ டோர்" சேவையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, டிசெம்பர் முதலாம் திகதி முதல் பொருள்களை இலங்கை சுங்கத்தின் சாதாரண சரக்கு முறையின் மூலம் இலங்கைக்கு அனுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை

27.11.2023
திங்கட்கிழமை
கார்த்திகை 11

சுபநேரம் : 12.12 - 01.42
ராகுகாலம் : 07.42 - 09.12
பூரணைவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் வென்ற மாணவர்கள் கௌரவிப்பு!







கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அகில இலங்கை ரீதியாக தமிழ்த் தினப் போட்டியில் சாதனையீட்டிய மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு தமிழ்த் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

எழுத்தாளரும் தமிழ்த் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இதில் தேசியத்தில் பேச்சுப் போட்டியில் முதலாமிடம் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் பா. சயந்தன், இலக்கிய விமர்சனப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை மாணவி சி. சிந்துஜா மற்றும் வாசிப்புப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற கிளிநொச்சி பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலை மாணவன் சி. ரனுசன் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-113)



## மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி, நவ.26

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண சமூகசேவைகள் திணைக்களம் மற்றும் வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளக விளையாட்டுப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

உதவிப்பிரதேச செயலாளர் திருமதி தமிழினி சதீஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், நிர்வாக கிராமஅலுவலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏறத்தாழ 100 வரையான மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர். (ரி-9)

## பனம் விதைகள் நடுகை



ஜே/155 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இளவாலை, வாதமடக்கி கிராமத்தில் தனியார் காணியிலும், ஜே/150 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாதகல் கடற்கரை லூர்து கெவி அன்னை யாத்திரைத் திருத்தலச் சூழலிலும் கடந்த திங்கட்கிழமை பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (ரி-66)




வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா, பிரதேசசபையில் அண்மையில் இடம்பெற்றது. பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஷ்வரன் கலந்துகொண்டார். (ம-75)

## குருதிக்கொடை



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் அனுசரணையில் விதையனைத்தும் விருட்சமே குழுமமும், கருகம்பனைப் பொது அமைப்புகளும் இணைந்து நடத்திய 36 ஆவது மாபெரும் குருதிக்கொடை முகாம் கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ரி-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய சூரசம்ஹார உற்சவம் அண்மையில் பலாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ரி-66)

கர்நாடக சங்கீதப் போட்டி

## சண்டிலிப்பாய் இந்து தேசியத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 26

கர்நாடக சங்கீதப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதல் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி தனதாக்கியுள்ளது. இந்தத் தேசிய மட்டப் போட்டி அண்மையில் புத்தளத்தில் இடம்பெற்றது. (ச-63)






வாசிப்புமாத தினத்தை முன்னிட்டு ஏழாலை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலய அணியினருக்கும் புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் அணியினருக்கும் இடையில் விநாடிவினாப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. (யு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ்ப்பாணத்தி தனது புதிய கிளையின் மூலம், சிறந்த இமேஜிங் உலகுக்கான கதவைத் திறந்துள்ளதுடன் தனது இருப்பையும் உறுதிசெய்துள்ளது CameraLK








இலங்கையின் முன்னணி கேமரா விற்பனை நிறுவனமான CameraLK, தனது மூன்றாவது கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது. வட மாகாணத்தில் உள்ள புகைப்பட ஆர்வலர்களுக்கு உயர்தர கேமரா, மற்றும் உபகரணங்கள், துணைக்கருவிகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இக் காட்சியறை அமைந்துள்ளது. இலங்கை முழுவதும் பரந்த வாடிக்கையாளர் தளத்தை அடைவதற்கான CameraLK இன் மூலோபாய விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியே யாழ்ப்பாணக் கிளையின் தொடக்கமாகும்.

CameraLK ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் முன்னிலையில் RMDC மற்றும் SONY விற்பனைத் தலைவர் Stanley Tan, Sony, RMDC DI மற்றும் SONY சந்தைப்படுத்தல் தலைவர் கரண் சம், CameraLK இன் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுஷ்கா குணசிங்க ஆகியோரால் புதிய கிளை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுர்க்கத்தில், முதலாம் தளத்தில் இலக்கம் 9 இல் அமைந்துள்ள புதிய கிளை, விசாலமான உட்புறங்களைக் கொண்டுள்ளது, வாடிக்கையாளர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ற சரியான கேமரா உபகரணங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்க அனுமதிக்கிறது. உயர்தர DSLR கேமராக்கள், பல்துறை கண்ணாடியில்லா கேமராக்கள், வசதியான பொயின்ட் அண்ட் ஷூட் கேமராக்கள் மற்றும் பரந்த அளவிலான கேமரா பாகங்கள் ஆகியவற்றின் விரிவான தொகுப்புடன், CameraLK இன் யாழ்ப்பாணத்தில் உள்ள புதிய கிளை வாடிக்கையாளர்களுக்கு சமீபத்திய போக்குகள் மற்றும் பிரீமியம் தயாரிப்புகளை ஒரே கூரையின் கீழ் வழங்குகிறது. அவ் வகையில் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்குகின்றது.

CameraLK இன் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுஷ்கா குணசிங்க, கருத்துக் கூறுகையில் "CameraLK ஐ யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வட மாகாணத்தில் உள்ள துடிப்பான புகைப்படக் கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோருக்கு எங்கள் கிளைகளை விரிவுபடுத்துகிறோம். இந்த புதிய கிளை எங்களின் சான்றாகும். சிறந்த வாடிக்கையாளர் சேவையுடன், சிறந்த வர்த்தக நாமங்களின் சிறந்த மற்றும் புதிய தயாரிப்புகளை நியாயமான விலைகளில் வழங்குவதற்கான அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்."

CameraLK இன் இணையத் தளமான www.cameralk.com வசதியான ஷொப்பிங் அனுபவத்தை வழங்குகிறது, வாடிக்கையாளர்களுக்கு ஒரு சில கிளிக்குகளில் பரந்த அளவிலான தயாரிப்புகளை ஆராயவும் ஆர்டர் செய்யவும் அனுமதிக்கிறது. தகவல்கள் மற்றும் ஆர்டர்களுக்கு, வாடிக்கையாளர்கள் CameraLK இன் யாழ்ப்பாணக் கிளையை நேரடியாக 077 139 7872 மற்றும் 077 118 7870 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

2010இல் நிறுவப்பட்ட, CameraLK தெற்காசியாவின் மிகப்பெரிய கேமரா விற்பனை நிலையம் மற்றும் மிகப்பெரிய ஆன்லைன் ஸ்டோர் ஆகும். CameraLK நீண்ட காலமாக இலங்கையின் புகைப்படத் துறையில் சிறந்த மற்றும் புதிய தயாரிப்புகள், தகவலறிந்த இமேஜிங் நிபுணர்கள், சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் போட்டி விலை நிர்ணயம் ஆகியவற்றுக்கான ஆதாரமாக அறியப்படுகிறது. Canon, Nikon, Sony, Sigma, Tamron, Tokina, DJI, GoPro, Profotto மற்றும் Wescott போன்ற பெரிய உற்பத்தியாளர்களிடமிருந்து CameraLK இலங்கை முழுவதும் உள்ள கடைகளில் 5,000 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளைக் கொண்டுள்ளது. கொழும்பு மற்றும் கண்டியில் தற்போதுள்ள கிளைகளுடன் இலங்கைதீவு முழுவதும் தனது இருப்பினை ஆன்லைன் ஸ்டோர் மூலம், CameraLK உறுதி செய்கின்றது.



Anushka Gunasinghe
Director - CameraLK

# கித்துல், தேனின் தரம் பாதுகாக்கச் சட்டம்

கித்துல், தேன் தொடர்பான பொருள்களின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கித்துல் அபிவிருத்திச் சபைக்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

கித்துல் தொடர்பான பொருள்களுக்கு சர்வதேச சந்தையில் அதிக கிராக்கி காணப்படுவதால் கித்துல், தேனின் தரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அந்தவகையில் அவற்றின் தரத்தைப் பாதுகாப்பதற்கென புதிய ஒழுங்குமுறைச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று கித்துல் அபிவிருத்தி சபைக்கு விவசாய அமைச்சர் ஆலோசனை வழங்கினார். (ச-இ)

# தாவராவதானி நிகழ்வு நல்லூரில்

யாழ்ப்பாணம், நவ. 26

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சியின் ஒரு கட்டமாக "தாவராவதானி"எனும் தலைப்பில் தாவரங்களை அடையாளம் காணும் போட்டி நிகழ்வு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டி நிகழ்வில் பால், வயது வேறுபாடின்றி எல்லோரும் பங்கேற்கலாமெனவும், வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும்,பரிசில்களும் வழங்கப்படும் என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினர் தெரிவித்தனர். (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு - கிழக்கு

# கடற்றொழிலுக்கு ஜப்பான் நிதியுதவி

கொழும்பு, நவ. 26

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில்சார் அபிவிருத்திகளுக்காக ஜப்பான் அரசாங்கம் 3 மில்லியன் அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இதுதொடர்பான ஒப்பந்தம் கடந்தபுதன்கிழமைநிதிஅமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிடேகி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த நிதி கடற்றொழிலாளர்களுக்கான குளிரூட்டல் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான நவீன உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படவுள்ளது. (ச-இ)

## வருடாந்த உற்சவ வழிபாடு இன்று

வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீர பத்திரக்கடவுள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேக பூசை அபிஷேகத்துடன் இடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து ஆலயத்தில் அன்னதானமும் வழங்கப்படும். மாலை தீர்க்கார்த்திகை தீப வழிபாடும் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## முதலை உயிரழப்பு

ஏ 9 வீதியைக் கடக்க முற்பட்ட ஐந்து அடி நீளமான முதலை வாகனத்தில் மோதுண்டு நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளது. (அ-ஒ-9)


### மணமகள் தேவை
யாழிந்து கௌரவகுலம் (V), 1988, மிருகசீரிடம்
Engineer,UK மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

### அறை வாடகைக்கு
நீராவியடி கல்லூரி வீதியில் விசாலமான
தனி அறை பெண்களுக்கு
மட்டும் வாடகைக்கு
உண்டு.
தொடர்பு: 070 414 4877

### வீடு விற்பனைக்கு
வத்தளை எந்தளையில் 5 அறைகள் கொண்ட மாடி வீடு 20 Perches உடன் விற்பனைக்கு உண்டு. எல்லா வசதிகளும் உண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்கிறார். தரகர்கள் தொடர்பு கொள்ளவும்
077 308 2032, 071 646 4185

### காணி விற்பனைக்கு
நவற்கிரி, அச்சுவேலி வீதி, நவற்கிரி சந்திக்கு அருகில்
18 அடிப்பாதையுடன் 13 1/2 பரப்பு காணியும், புத்தூர் நவற்கிரி வீதி, நவற்கிரியில் 46 பரப்புக் காணியும்
விற்பனைக்குண்டு.
077 706 6487

### வீசா ஒழுங்குகள்
கனடா, இங்கிலாந்து டூரிஸ்ட் வீசா, மாணவர் கல்வி வீசாவுக்கு தேவையான சகல ஆவணங்களும் பெற்று தருவதுடன் ஆலோசனைகளும் வழங்கப்படும்
வட்சப் நம்பர்
0766292899


### வேலையாள் தேவை
கொழும்பில் புதிதாக திறக்கப்படவுள்ள Hotel இற்கு அனுபவமுள்ள பின்வரும் வேலையாட்கள் உடனடியாகத் தேவை
Night Receptionist
House keeper
Room Boy
CV: 0777699207
E-mail-Lankaconsult@yahoo.com

### வெற்றிலைக்கேணியில் 47 ஏக்கர் காணி விற்பனைக்கு
முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிலைக்கேணி கடற்கரையில் இருந்து 300 மீற்றர் தூரத்தில். புதிதாக அமைக்கப்பட்ட கார்பெட் வீதியிலிருந்து நேரடிப்பாதை உள்ள, சுற்றுவேலி அமைக்கப்பட்ட 47 ஏக்கர் காணி விற்பனைக்குள்ளது.
தொடர்பு: +94 771 458 828

### காணி விற்பனைக்கு
82/5A, Mt.Lavinia Galle Road,
(Pizzahut இற்கு பின்புறமாக)
தூய உறுதியுடன் கூடிய 9P
வெற்றுக்காணி விற்பனைக்குண்டு
உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை
1P - 33 இலட்சம் - பேசித்தீர்மானிக்கலாம்
காலி வீதியிலிருந்து 55 மீற்றர் தூரத்தில் 3 வது கடைசி காணி
உரிமையாளர் 077 0817961 | 076 2920290 | 077 0765290 | +61450506926

### பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை
யாழ்ப்பாணம் கைதடி. குருநகர்.
OIC - 1300/-
JSO - 1200/-
தொடர்பு: 075 363 2025

### மணமகன் தேவை
யாழிந்து கௌரவகுலம் (V),1997, அவிட்டம்
Bank Officer,Canada மணமகளுக்கு
மணமகன் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

### மணமகன் தேவை
யாழிந்து கௌரவகுலம் (V),1993, அனுசம்
Doctor,UK மணமகளுக்கு
மணமகன் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

### மணமகள் தேவை
யாழிந்து கௌரவகுலம் (V),1988, விசாகம்
Lawyer,Canada மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0772321404
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

### மணமகள் தேவை
யாழிந்து கௌரவகுலம் (V), 1989, உத்தராடம்
Veterinary Surgeon,Canada
மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

### விற்பனைக்கு
கடைப் பாவனைக்குரிய 5 அடி நீளமுள்ள சோக்கேஸ் மற்றும்
Bottle Cooler (Glass door)
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: No: 17, விதானையார் வீதி, சுண்டுக்குளி
077 623 8129

### வீடு, காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகரத்தில்,
சிவன்கோயிலுக்கு அருகில்,
செட்டித்தெருவில் 4 பரப்பும் 2.88 குழியும் உடைய வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
கிணறு பங்குடன்கூடியது.
077 617 6623

### வணிக சொத்தொன்று வாடகைக்கு தேவை
யாழ்ப்பாண நகரில் வணிகச் சொத்தொன்று வாடகைக்கு தேவை
முன்னணி நிதி நிறுவனமொன்றுக்கு வாடகைக்கு வணிகச்சொத்தொன்றை தேடுகின்றது
இடம் : யாழ்ப்பாண நகரம்
பரப்பளவு: 1500 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை
தொடர்புகளுக்கு :
N. HARSHANTH
075 485 1581

### காணி விற்பனைக்கு
வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள ஒந்திராய் துறையடி வயல் (நிலப்பரப்பு 7, குளி 3.48) காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 742 2604

### மணமகள் தேவை
இந்து (V) உயர் கௌரவ குடும்ப 1991 ஆம் ஆண்டு பிறந்த விசாக நட்சத்திரம் 4 இல் செவ்வாயுள்ள சொந்த கடை வைத்திருக்கும் மணமகனிற்கு வடமராட்சி பிரதேசத்திற்கு உட்பட்ட மணமகள் தேவை
தொடர்பு : 077 742 2604

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவகுலம்.(V)
1986 சித்திரை கிரகபாவம். 14 1/4.
செவ்வாய்
2இல். 2ம் பாதம்.
சுயதொழில் செய்யும்
மணமகனுக்கு
மணமகள் தேவை.
தொடர்பு:
0775470631

### வீடு விற்பனைக்கு
யாழ் நல்லூர்ப் பகுதியில் சுற்று மதிலுடன் கூடிய 1 1/2 பரப்பு காணியில் இரண்டு அறைகளுடன் கூடிய வடக்கு வாசல் வீடு அமைதியான சூழலில் விற்பனைக்கு.
077 933 7329
070 170 0976

### மேல்வீடு வாடகைக்குண்டு
பிரதான வீதி, பஸ்தியான் சந்திக்கு அண்மையில் வீட்டின் மேல் தளம் வாடகைக்கு உண்டு. 03 அறைகள், 02 வரவேற்பறை, சமையலறை, குளியல் அறையுடன் இணைந்த கழிப்பறையுடன் கூடியது. மருத்துவ பீட மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 077 4435 414

### உடன் விற்பனைக்கு
Full Body Truck ISUZU (10 1/2 அடி)
64000 Km ஓடியது
NKR செசி
4JJ1 என்ஜின்
தொடர்பு 077 131 5084

### The Royal College of Jaffna
03 மாதங்களில் சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (குபேரன் கட்டிட மாடி), பிரான்பற்று வீதி, சங்கானை.
தொடர்பு: 077 675 1649

### ப்ரீமியர் கொன்ஸ்டருக்ஷன் மைண்டேனன்ஸ்
Premier Construction & Maintenance (Pvt) Ltd

அழகான நேர்த்தியான Kitchen Pantry, Bathroom and Room Design and Fittings
கவர்ந்திழுக்கும்
Shop Design and Fittings
077 763 9299
(cs.27075) (N.1)

### பெண் வேலையாள் தேவை
தங்கி இருந்து மகப்பேறு. சமையல் வேலை பார்க்க அனுபவமுள்ள பெண் தேவை.
077 844 9707

### விற்பனைக்கு
தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயு, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விளும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், தேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: நியூ லங்கா பாம் பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில் 077 612 9343
நியூ லங்கா பாம் கிளை: K.K.S. வீதி, இணுவில்

### விபஸ்ஸனா தியான பயிற்சி முகாம்
காலம்
5 முதல் 16 டிசம்பர் 2023 வரை.
வயது: 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
பாத்திமா ரிட்ரீட் ஹவுஸ்
பண்டதரிப்பு, யாழ்ப்பாணம்.
அனைத்து தியான நிகழ்ச்சிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன (உணவு தங்குமிடம் உட்பட).
விசேட இரு மொழிகள்
தமிழ் / ஆங்கிலம்

மின் அஞ்சல்
info@sobha.dhamma.org
இணையத்தளம்
www.sobha.dhamma.org
www.dhamma.org
மேலும் தகவல்களுக்கு: விண்ணப்பித்தல்களுக்கும் அடுத்த வகுப்புகளுக்குமானதும்
தொலைபேசி இலக்கங்கள்
077 350 44 91, 071 643 94 54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 08.11.2022 அன்று சிவபதமடைந்த
எமது குலவிளக்கு

அமரர்
**சுப்பிரமணியம்**
**(இரண்டாயிரம்) சாந்தா**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் கிரியைகள் இன்று (26.11.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மாகியப்பிட்டி,**
**சண்டிலிப்பாய்.**

**குடும்பத்தினர்**

(CS.27039) (N.1)

## யாழ். குடாநாட்டு விவசாய விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். (வ-து)

## எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

வயதெல்லை

18-45 (கூட்டுறவு பணியாளர்களுக்கு வயது எல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)
சம்பளத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படுபடும்.

| | |
|---|---|
| 01.பதவி | : **பண்ணை முகாமையாளர்** |
| 02. வெற்றிடம் | : 01 |
| 03. சம்பளக் குறியீடு | : 115 / 10. |
| 04. சம்பள அளவுத் திட்டம் | 19745 - 225 X 10-220 X 10-24495 (02/2022இன்படி) |

**கல்வித் தகைமை:**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் விவசாய விஞ்ஞானத்திலான பட்டதாரி / அதற்குச் சமமான தகைமை

**அல்லது**

ஆ) குண்டகசாலை விவசாய கல்லூரியின் / அதற்குச் சமமான வேறேதேனும் அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியின் விவசாய டிப்ளோமா கற்கை நெறியிலான சான்றிதழ்

**அல்லது**

இ) க.பொ.த.உயர்தர சித்தியுடன் விவசாயம் சம்பந்தமான 03 மாதங்களிற்கு குறையாத பயிற்சிச் சான்றிதழ் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 8 வருடகால விவசாய / விதை உற்பத்தித்துறையிலான தொழில்சார் அனுபவம்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சுயமாக தயாரித்து கல்வித்தகைமை சான்றிதழ்களின் பிரதியுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு **தலைவர். யாழ் குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம். பலாலி வீதி. திருநெல்வேலி வடக்கு** எனும் முகவரிக்கு 11.12.2023ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் நேரடியாகவோ, அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்.**
**யாழ். குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் வ-து**

(cs 27071) (N.1)

## 36 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இராசதுரை பஞ்சாட்சரம்**
(ஸ்தாபகர் - அருள் முருகன் நகைமாடம்)
(திதி - பூரணை)

ஆண்டுகள் பல சென்றதையா
ஆறவில்லை எம் துயரம்
ஆறுதல் எமக்கு சொல்வதற்கு
அப்பா நீங்கள் இல்லையே!
ஒளி தரும் சூரியனாக
இருள் அகற்றும் நிலவாக
ஊர்போற்றும் நல்லவனாக
பார்போற்றும் வல்லவனாக
வாழ்வாங்கு வாழ்ந்து - எங்களை
வாழவைத்த தெய்வமே
உங்கள் ஒழுக்கம் நற்பண்பு மதிப்புகள்
யாவும் எங்கள் வாழ்வில் என்றென்றும்
வழிகாட்டியாக இருக்கும்!



தோற்றம் 18.11.1936
மறைவு 04.12.1987

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**தகவல் :**
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சகோதரி**

**483, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

CR 41207 (AK.1)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03 . 08 . 1977



உதிர்வு
30 . 11 . 2020

உலகெலாம் ஒளிரும் திருக்கார்த்திகை நாளில் அணைந்து
விட்ட எமது ஆருயிர் மகள்

செல்வி
**தர்ஷினி ஜெயரட்ணம்**
(Dip - in - English)
( பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை - வேலணை
மத்திய கல்லூரி )

**கல்வியின் ஒளிவிளக்காய் கனிவான ஆசானாய்**
**செல்ல மகளாய் சிறந்ததோர் குருவாய்**
**உலகுக்கு அறிவு விளக்கேற்றிய நீ கார்த்திகை நாள்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்**


**லோட்டன் வீதி,**
**மானிப்பாய்.**
**26/11/2023**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

CS 52925 (AK.1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 08 . 1964



மறைவு
22 . 11 . 2023

**திருமதி புஸ்பராசா விமலராணி**

வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிட மாகவும் கொண்ட திருமதி புஸ்பராசா விமலராணி அவர்கள் கடந்த (22.11.2023) வேலணையில் காலமானார்.

அன்னார் புஸ்பராசா அவர்களின் அன்பு துணைவியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் சிவகங்கை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகராசா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கஜீந்தன், பவ்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயதீபனின் மாமியும், கருணாகரன், கிருபாகரன், ஜெயராணி, காலஞ்சென்ற மதிகரனின் பாசமிகு சகோதரியும், மன்மதராசா, காலஞ் சென்ற புஸ்பராணி மற்றும் கிருஷ்ணராணி, ரஜனி, கடம்பேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், நகுலேஸ்வரி மற்றும் சிவலிங்கம் நித்தியலட்சுமி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பூபதி ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை வேலணை 3ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 9.00 மணியளவில் பூதவுடல் தனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளையார் வீதி,**
**3ஆம் வட்டாரம், வேலணை.**

**தகவல்:**
**புஸ்பராசா குடும்பத்தினர்**
**076 285 2824, 076 433 3892**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பி.ஜெ. பர்னான்டோ**

கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குபவர்கள்.
பல் கட்டுபவர்கள்.

**இலவச கண் பரிசோதனை**

**P.J FERNANDO**
**DENTAL & OPTICAL WORKS**

071 797 8395 / 077 864 3992 MRS.A.Jeyakumaran
No.220, 1st Cross Street, Jaffna. (Vembady Signal Junction)
(cs.52993) (N.1)



**வீடு காணி விற்பனைக்கு**

வெள்ளவத்தை IBC Road
3 Bedroom Completed 1100 Sq ft விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாணம் Stanly வீதியில் 3 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் Commercial Building For Sale

யாழ்ப்பாணம் நெல்லியடி வடமராட்சியில் Wedding Hall with Restaurant விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் வீதியில் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

Call 077 522 26 13 No Brokers



## ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டிதுறையில் ஐந்து வருடங்களிற்கு மேலாக இயங்கி வருகின்ற வல்லை முதியோர் இல்லத்திற்கு முதியோரை பராமரிப்பதில் அனுபவமுள்ள ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு : 077 810 6857
077 154 2067
021 226 5551

CS 26565 (AK.1)



## வேலைவாய்ப்பு

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள **Tourist Beach Resort** ற்கு முகாமையாளர் தேவை.. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் புலமையும். தமிழ் பேசும் திறனும் இருத்தல் வேண்டும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுககு சேவைகளை வழங்குவதற்கு கணனி அறிவு மிக அவசியம். விண்ணப்பங்கள் ஏற்ற பின் தனி நேர்முக தேர்வின் பின் வேலைக்கு அமர்த்தப்படும். ஆரம்ப மாத சம்பளம் **70000+Service charge** ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு பின் செயல்திறனைப் பொறுத்து சம்பளம் அதிகரிக்கப்படும். பணியாளர் விடுதி நீர்.மின்சாரம் உட்பட இலவசம். வெற்றிகரமாக காலாண்டை நிறைவு செய்த விண்ணப்பதாரருக்கு சனி. ஞாயிறு உட்பட மாதத்திற்கு **4** நாட்கள் விடுமுறை வழங்கப்படும். தற்போதுள்ள **Resident Supervisor** மேளாலரின் செயற்பாடுகளுக்கு உதவுவார். விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படும் போது பணி அனுபவம். கடந்தகால பணி இடங்களில் பெற்ற சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டும்.

ஆர்வம் உள்ளவர்கள் உரிமையாளரின் அலைபேசி எண் **0773515407** க்கு காலை **7.am -10.am** வரை தொடர்பு கொண்டு நேர்முக பரீட்சைக்கான நேரத்தை தெரிந்து கொள்ளவும்.


## கண்ணீர் அஞ்சலி

எமது புலோலி மந்திகை வில்லிபாதி முருகன் ஆலயத்தில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக கந்த சஷ்டி விழாக்காலங்களில் நாதமழை பொழிந்த நாதஸ்வர வித்துவான்

**ஜெ.சிவதாசன்**



அவர்கள் அமரரான செய்தியறிந்து கவலையடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயரில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வில்லிபாதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

வ. கிருஸ்ணபிள்ளை குடும்பம்
கந்தசஷ்டி விழா உபயகாரர்
புலோலி வில்லிபாதி முருகன் ஆலயம்.
மருதானை, கொழும்பு.

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 04 . 1937



மறைவு 24 . 11 . 2023

**முதலித்தம்பி கனகமணி**

வட்டுவினி இணுவில் மேற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முதலித்தம்பி கனகமணி கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இரரசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற முருகேசு அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முதலித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசரத்தினம், இராசமணி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சங்கரப்பிள்ளை, சரஸ்வதி, தியாகராசா, நடராசா ஆகியோரின் மைத்துனியும், நடராசா, நாகராசா, சண்முகலிங்கம் சிவபுஸ்பம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், கமலேஸ்வரி, தயாநிதி, அருணகிரி, கண்ணப்பா, காலஞ்சென்ற கிருபாலினி மற்றும் முருகானந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, குமாரசாமி (துங்கராசா), செல்வரஞ்சினி, பிருந்தா, சிவகாமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்த்திகா - மயூரன், தர்சிகா - நவநீதகுமரன், கார்த்திகா - அமிர்தாஸ், அன்பரசி - ஜீவன், பார்த்தீபன் - நிரோஜினி, அபிராம் - மாதுர்ஜா, தசாங்கினி - தீபன், தினேஸ் - கம்சிகா, கீர்த்தன், அஜன், அபிஷா, அஸ்வின், தேசன், தக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அயூர்சி, அர்சகி, சுபன்ஜா, சரண்யா, சரவணன், கவிஸ்னா, கிருத்திக், கரீஸ், சபரீசன், அஸ்வி, யாகவி, பவின் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2023) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 27083) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1949



இறப்பு 25 . 11 . 2023

**வே.மார்க்கண்டு**

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் இணுவில் கந்தசுவாமி கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட வே.மார்க்கண்டு அவர்கள் நேற்று (25.11.2023) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா கனகம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஷ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோகராஜா, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஷ்வரியின் பாசமிகு சகோதரனும், பவானி, யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் பேரெழில்குமரன், குகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபினயா, அக்ஷயன், அபிஷரன், பானுகன், பவித்திரன், பாவனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 27082) A-1

## கிளிநொச்சியில் மாவீரர் மண்டபம்

*கிளிநொச்சி, நவ. 26*

மாவீரர் பெயர் தாங்கிய நினைவு மண்டபம் கிளிநொச்சி டிப்போ சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்கேற்றிருந்தார்.

(அ-ஒ-113)

## மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளகவிளையாட்டுப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

உதவிப்பிரதேச செயலாளர் திருமதி தமிழினி சதீஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், நிர்வாக கிராம அலுவலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏறத்தாழ 100 வரையான மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

(ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம் - Sales Executive
## K.U.S Formwork & Scaffolding (PVT) LTD
## (வடமாகாணம்)

கொழும்பில் அமையப்பெற்றுள்ள பிரபல நிறுவனம் ஆகிய K.U.S Formwork and Scaffolding (Pvt) Ltd நிறுவனம் தனது உள்நாட்டு செயற்பாடுகளை வடமாகாணத்திற்கு விரிவுபடுத்தி வருவதால் எங்கள் நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு தகுந்த அனுபவம் வாய்ந்த Sales Executive வடமாகாணத்தில் தேவை.

**வாடிக்கையாளர்களுக்கு எங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு Sales Executive முக்கிய பங்கு வகிக்கிறார்.**

- மாதாந்த விற்பனை இலக்கை அடைதல் (Achieving monthly sales target along with the product expansion)
- திட்ட தகவல் மற்றும் பிற ஆதாரங்கள் மூலம் புதிய தயாரிப்பு வாய்ப்புக்களை பெறுதல் (Solicits new product prospects through project information and other sources)
- ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக கவனித்து ஆதரவை வழங்குவதன் மூலம் நல்லுறவை பேணுதல் (Builds rapport with existing customers to achieve continuous support by constantly monitoring their progress and attending to their needs)
- Invoice திகதியில் இருந்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அனைத்து கடன்களையும் மீளப்பெறுதல் (Manage and follow up to collect all the debts within the stipulated credit period from the invoice date)

**எதிர்பாக்கப்படும் கல்வித்தகைமைகள்:**

- விற்பனைத்துறையில் 2 வருட குறைந்தபட்ச அனுபவம் (Minimum 2 years of experience in the field of Sales)
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் சான்றுதல் (Certification in sales and marketing from a recognized institute)

**எதிர்பாக்கப்படும் ஏனைய தகைமைகள்.**

- செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் மற்றும் வாகனம் வைத்திருத்தல் வேண்டும் (Should have a valid driving license (A, A1, B Class) and Vehicle)
- 22 - 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/பெண் (Male/Female between the age range of 22-40 years)
- விண்ணப்பிப்பவர் யாழ்ப்பாணத்தில் வசிக்க வேண்டும்


தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களுக்கு அடிப்படை சம்பளம், வாகன கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் கமிஷன் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள், சுயவிபரக்கோவையை hr@kus.com.lk எனும் Email முகவரிக்கு அனுப்பவும்.

**K.U.S Formwork & Scaffolding PVT Ltd**
**+94 112 572 727**

(cs.52958) N.1)

SMART ஆக
கொடுக்கல் வாங்கல் செய்யுங்கள்
RDB VISA Debit Card இற்கு
இன்றே மாறுங்கள்




ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank
நாட்டின் முன்னோடி அரச அபிவிருத்தி வங்கி

HOTLINE 011 2 425 262
www.rdb.lk

# வினோ நகைப்பூங்கா



**185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 24.11.2023 வெள்ளிக்கிழமை தொடக்கம் இல. 177, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.**




**உரிமையாளரும், ஊழியர்களும்**
**வினோ நகைப்பூங்கா**
**இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சோமசுந்தரம் (சோமண்ண)



**தோற்றம்**
**11.07.1947**

**மறைவு**
**25.11.2023**

கரம்பொன் ஐ பிறப்பிடமாகவும். திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோமசுந்தரம் அவர்கள் நேற்று (25.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். புஷ்பராணி அவர்களின் பாசமிகு கணவரும். ஆனந்தீஸ்வரி (பிரான்ஸ்). சிவகுருநாதன் (பிரான்ஸ்). வாகீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும். கஜரூபன். காந்தரூபன். மதனரூபன். சர்மிளா. ஜெயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும். வரலக்ஷ்மி. தர்சனா. ரோகிணி. அனுஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும். மதுஷன். கபினுஜன். அஷ்மிதா. யஸ்வந்திக்கா. எலன் ஹிர்த்விகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி 2ஆம் ஒழுங்கை,**
**ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**மனைவி-076 3559 824**
**மகன் - 077 8331 494**

(CS 27090) A-1

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் ஞானசேகரன் (சேகர்)

**(முன்னாள் வர்த்தகர் - திருநெல்வேலி, உரிமையாளர் - MGR CD கடை - நல்லூர்)**



**மண்ணில்**
**30.07.1957**

**விண்ணில்**
**23.11.2023**

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 46/1. அம்மன் வீதி. நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஞானசேகரன் (சேகர்) அவர்கள் கடந்த (23.11.2023) அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும். மங்களேஸ்வரி (செல்வம்) அவர்களின் ஆருயிர்க் கணவரும். செல்வகாந் (பிரதம செயலாளர் செயலகம் வ.மா. கைதடி). கௌசல்யா (கனடா). விமலகாந் (MGR CD கடை. நல்லூர்). பவித்திரா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும். விஷாலினி (ஆசிரியை. யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம்). பரமேஸ்வரன் (கனடா). சிந்துயா (ஆசிரியை. யாழ். இந்து ஆரம்ப பாடசாலை). பாரத் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். ஞானசம்பந்தன் (ஜேர்மனி). நந்தகுமாரன் (ஜேர்மனி). மன்மதராசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர். நவாலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். புனிதாம்பாள் (ஜேர்மனி). லலிதா (ஜேர்மனி). வாசுகி (அதிபர் - சந்திரோதய வித்தியாசாலை. உரும்பிராய்). இராஜஇராஜேஸ்வரி. சண்முகராசா. யோகேஸ்வரி. மகேஸ்வரி. கனகேஸ்வரி. ஞானேஸ்வரி. முருகதாஸ் (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும். துவாரகி. கவின். பவிஷா. கம்ஷானா. யதுர்ஷா. சோபினி. காயத்திரி. ஆதிசன். சஞ்சனா. ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 285 2897**
**077 844 8083**

**46/1, அம்மன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS 27093) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞன் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 26
பருத்தித்துறையில் நேற்றுமாலை இடம்பெற்ற வாள்வெட்டில் கந்தவுடையார் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் டிலக்சன் (வயது-23) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளைஞர் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-100)

### விபத்தில்...

கடந்த 22ஆம் திகதி இத்தாவில் பகுதியில் பேருந்திலிருந்து இறங்கி நடக்கும் போது, வேகமாக வந்த முச்சக்கரவண்டி மத்திய கோட்டையும் தாண்டி பின்பக்கத்தால் மோதியதில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்றுமுன்தினம் மேற்கொண்டார். (அ-ஓ-26)

### மாவீரர் நாளுக்கு...

கிளிநொச்சியிலுள்ள 7 பொலிஸ் நிலையங்களாலும் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 106 இன் கீழ் தனித் தனியாக மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. நேற்றையதினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் மன்றில் தோன்றி, நினைவு கூரல் அடிப்படை உரிமை. அதை மறுக்க முடியாது. குற்றவியல் சட்டத்தின் பிரிவு 106 என்பது பொதுத் தொல்லையுடன் தொடர்புடையது. அந்த ஏற்பாடுகளின் கீழ் நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது என்ற வாதத்தை முன்வைத்திருந்தார். அதற்கு அமைவாக 7 பொலிஸ் நிலையங்களினதும் மனுக்கள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதேபோன்று மன்னார், ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் 27ஆம் திகதி நடைபெறவுள்ள நினைவேந்தலுக்கு தடை உத்தரவை பிறப்பிக்கக் கோரி அடம்பன் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி எஸ்.டினேசன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், நினைவேந்தலை அமைதியான முறையிலும், அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையிலும் நினைவு கூர்வதற்கு மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. நினைவேந்தல் நிகழ்வுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான இலச்சினைகள் மற்றும் கொடிகளைப் பயன்படுத்தாது அமைதியான முறையில் நினைவுகூர முடியும் என நீதிமன்றம் அனுமதி வழங்கியது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை - முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்த மனு மீதான கட்டளையில், உயிரிழந்தவர்களை விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்ற ரீதியில் அல்லாது ஆன்மாக்கள் என்ற ரீதியில் மாத்திரம் சட்டத்தை மீறாத வகையிலும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் பொது அமைதிக்கும், பொதுப் போக்குவரத்துக்கும் பாதிப்பு இல்லாமல் நினைவு கூருவதை தடைசெய்யாது என விளம்பி கட்டளையாக்கப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ-19-113-213)

### கட்டடத்தால்...

வீழ்ந்துள்ளார். அங்கு அவர் கோமாவில் இருந்துள்ளார். இந்த நிலையில் வீட்டார் தூதரகத்தின் உதவியுடன் கடந்த 17ஆம் திகதி அவரை யாழ்ப்பாணம் கொண்டு வந்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சையளித்துள்ளனர். இந்த நிலையில் நேற்றையதினம் அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வலி.கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஓ-26)

### தலைவர்...

அவர் பிறந்த இடமான வல்வெட்டித்துறை மற்றும் யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடக்கிலும் கிழக்கிலும் முக்கியமான நகர்ப்பகுதிகள், சந்திகளில் சிறிலங்கா படையினர், காவல்துறையினரின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன. அதிகளவான இடங்களில் அவர்கள் நிலைகொண்டுள்ளனர். சில இடங்களில் வீதியில் செல்வோரை வழிமறித்து ஆவணங்களை சோதனையிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பார்வதிஅம்மாள் தம்பதியினருக்கு 1954ஆம் ஆண்டு இதே மாதம் இதே நாளில் நான்காவது பிள்ளையாக பிரபாகரன் இணுவிலில் உள்ள மருத்துவமனையில் அவதரித்தார். இன்று அவருக்கு வயது 69. அவரது பிறந்ததினத்தை தமிழ் மக்கள் கொண்டாடக் கூடும் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே படைத்தரப்பினர் தமது கெடுபிடிகளை அதிகரித்துள்ளனர். வல்வெட்டித்துறையில் உள்ள பிரபாகரனின் பூர்வீக இல்லத்திலும் நேற்றுமுதல் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-5)

### மாவீரர் பெற்றோர்...

பற்றிக் தனுஷ் தலைமையில் உணர்வு பூர்வமாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. தாயக விடுதலைக்காக இன்னுயிரை ஈந்த மாவீரர் பெற்றோரால் ஈகச்சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. மாவீரர்களின் நினைவாக மாவீரர் பெற்றோருக்கு தென்னங்கன்றுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டதோடு, முன்னாள் போராளி செழியனால் மாவீரர் நினைவுரையும் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாவீரர் பெற்றோர், உரித்துடையோர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-ஓ-125)

### தமிழ்...

கிளிநொச்சி, முள்ளிவாய்க்கால் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்களை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு, குடியகல்வு எல்லை கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். (அ-ஓ-இ)

## மரண அறிவித்தல்



## ஜெகநாதன் சிவதாசன்

**(நாதஸ்வர வித்துவான்)**

**தோற்றம்**
**01.03.1965**

**மறைவு**
**24.11.2023**

கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் சிவதாசன் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெகநாதன் அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வனும், நாகூர்செல்வம் புஸ்பராணி தம்பதியரின் மருமகனும், கவிதாவின் பாசமிகு கணவரும், சிவகுமார் (கனடா), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், போயநாதன், ஹரீசன், பவீதன், சினேகா, சகானா ஆகியோரின் அன்புத் தந்தையும், கரிகரன், நித்தியசிறி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 464 6829**
**077 583 7759**

(cs.52963 ) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.5 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 26
ஊர்காவற்றுறையில் 3.5 கிலோ கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைதானதாகவும், சுழிபுரம் மற்றும் பருத்தி அடைப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-23)

## விசாக்கான Show money

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
visit visa
student visit visa
fixed & saving
All travel documents
மிகக் குறைந்த கட்டணத்தில்!
தொடர்பு:
075 033 6759

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை, வீமன்காமத்தில் காணி விற்பனைக்குண்டு.
077 923 9802,
077 729 6999

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில். வீடு வாடகைக்குத் தேவை. நிறுவனம் ஒன்றிற்கான இடமாக இருப்பது விரும்பப்படும்.
தொடர்புகளுக்கு
0777 111 999

## மணமகள் தேவை

கொழும்பில் இரண்டு சொந்த வியாபார ஸ்தாபனம் நடத்தும் 1983 இல் பிறந்த கத்தோலிக்க மதத்தை சேர்ந்த மணமகனுக்கு வட மாகாணத்தில் வாழும் கத்தோலிக்க மணமகளை தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு: **0044 7710 314169** (பிலிப்)
(Viber, Whatsapp, Direct Call after 1 pm Srilankan Time)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.

திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.

- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- **ஜெயம்**
**077 814 7389,077 986 5457**

## வேலைவாய்ப்பு

ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையில் முன்பள்ளி மாணவர்கள் தொடக்கம் தரம் - 3 வரை கற்பிக்க கூடிய ஆங்கில ஆசிரியர்கள்

1). சரளமாக ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் (சம்பளம் 25000/= ரூபா)
2). ஆங்கிலம் பயிற்சி மற்றும் பழக விரும்புபவர்கள் (சம்பளம் 17000/= ரூபா)
3). சிங்களம் எழுத்துப் பயிற்சி வழங்க கூடியவர்கள், பேசக் கூடியவர்கள் (சம்பளம் 25000/= ரூபா)
4). இரு மொழிகளிலும் பயிற்சி கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி: 27.11.2023
திங்கட்கிழமை காலை: 8.00 - பி.ப. 1.00 மணிவரை
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய தொ.இலக்கம்
**077 377 0524**
(CS 51990) A-1

## Grand Opening

Confifi Guest House
Wellawatte
**076 419 2934**

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ் மனோகரா திரையரங்கிற்கருகிலுள்ள போட்டோக் கொப்பி, புத்தகக் கடைக்கு அனுபவமுள்ள/அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: **076 832 3682**

## தேவை

யாழ் நகரில் கையடக்க தொலைபேசி நிலையம் ஒன்றிற்கு
- விற்பனையாளர்
- திருத்துனர் (இருபாலாரும்)
- பழகவிரும்புவோர்

வயது - 18 - 22
சம்பளம் - 25000 - 30000
**077 199 6177**

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
Viber or Whatsapp
0044 7578 626565, 077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

## தனிநாயகம் அடிகளாரின் பன்முக ஆளுமை

Zoom வழி தமிழ் வான் அவை நடாத்தும் இக்கருத்தரங்கில் தாங்களும் பங்குபற்றி தங்கள் கருத்துகளையும் பகிரலாம்
ZOOM ID : 2509770769
PASSWORD : 246810
ஒருங்கிணைப்பு : யாழ்பாவாணன்
(070 344 5441)

## ROLLER GATE

யாழ். பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றிற்கு இரண்டு ROLLER GATE (2) மற்றும் ஒரு விக்கட் GATE பொருத்துவதற்கு அனுபவம் உள்ள TECHNITION தேவை. GATE இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
பொருத்தி தரக்கூடியவர் தேவை.
**0777 111 999**

## Spoken English & Grammar

யாழ் இந்துக் கல்லூரி வீதியில்
தனி. குழு வகுப்புக்கள்
ஆண்டு 7 - GCE O/L, A/L
பட்டதாரிகள் தொழில் புரிவோர்
K. Ganesh BA
077 766 8725

## சுருட்டு சுற்றும் உரிமம் [LICENCE] தேவை

சுருட்டு சுற்றும் உரிமம் (LICENCE) தேவை. புதுப்பிக்கப்படாத/ காலாவதியான/ நடைமுறையில் உள்ள LICENCE கொள்வனவு செய்யப்படும். பல வருடங்கள் பழமையானது என்றாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.
**0777 111 999**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு**, நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**
(CS 27074) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
07 . 08 . 1997

மறைவு
23 . 11 . 2023

# பிரதாபன் கிருஷ்ணமூர்த்தி

(பொலிஸ் உத்தியோகத்தர் - ஜாஎல)

சாவகச்சேரி கற்குழியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் கடந்த (23.11.2023) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் கிருஷ்ணமூர்த்தி பவானி தம்பதியினரின் ஏக புத்திரனும், கார்த்திகா, வினோஜா ஆகியோரின் அனபுச் சகோதரனும், சிவதீசனின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனகிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குழி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 399 9850

CS 52954 (AK.1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 04

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 கார்த்திகை 10 ஞாயிற்றுக்கிழமை (26.11.2023) சிகரம் : 174

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழி மூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம் தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாரும் என்று
உங்களின் வாசலில்
வந்துமை வணங்குகின்றோம்

உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்

சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

(எங்கே எங்கே)

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

(எங்கே எங்கே)



**வரிகள்: புதுவை இரத்தினதுரை**
**பாடியோர்: வர்ண ராமேஸ்வரன் குழுவினர்**

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நிலாந்தன்




# மாவீரர் நாள் 2023

போர் முடிவுறுத்தப்பட்ட பின்னர் வருகின்ற 15 ஆவது மாவீரர் தினம் இவ் வருடம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளாக மாவீரர் நாள் போன்ற நினைவு நாள்களை ஒரு கட்டத்துக்கு மேல் பரவலாக மக்கள் மயப்படுத்துவதில் சட்டப் பிரச்சினைகள் இருந்தன. நீதிமன்றங்கள் நினைவுகூர்தலுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கும் போது, நினைவுகூர்தலை ஒப்பீட்டுளவில் மக்கள் மயப் படுத்தக்கூடியதாக இருந்தது. எனினும் கடந்த 15 ஆண்டுகளிலும் மக்கள் மத்தியில் இருந்து பயத்தை முழுமையாக அகற்ற முடியவில்லை. அது ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. அரசியல் பிரச்சினையுந்தான். அரசியல் தலைமைத்துவப் பிரச்சினையுந்தான். விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட நினைவு நாள்களின் போது நீதிமன்றங்களின் முடிவுகளே பெருமளவுக்கு நிலனவுகூர்தலைத் தீர்மானிக்கும் ஒரு நிலைமை தான் கடந்த 15 ஆண்டுகளாகக் காணப்படுகின்றது.

இம்முறை வடக்கிலும், மட்டக்களப்பிலும் நீதிமன்றங்கள் சாதகமாக முடிவெடுத்துள்ளன. இந்த விடயத்தில் சட்டவாளர்களாகக் காணப்படும் தமிழ் அரசியல்வாதிகள் ஒப்பீட்டளவில் நிரந்தரமான ஒரு சட்ட ஏற்பாட்டைக் குறித்துச் சிந்தித்திருக்கக்கூடிய ஒரு காலகட்டம் இருந்தது என்று ஒரு சட்டவாளர் சில ஆண்டுகளுக்கு முன் சுட்டிக்காட்டினார். 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான 30/1 தீர்மா னத்தின் படி மக்களுக்கு நினைவுகூரும் உரிமை உண்டு. தனிப்பட்ட அல்லது பொது நினைவுச் சின்னங்களை உருவாக்கும் உரிமையும் உண்டு. நிலை மாறுகால நீதியின் நான்கு பெரும் தூண்களில் ஒன்றாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அது குறித்துப் பேசப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க இழப்பீட்டு நிதிக்கான அலுவலகத்துக்குரிய சட்ட வரைவைக் கொண்டு வந்த பொழுது அதில் நினைவு கூர்தல் தொடர்பாக தமிழ் நோக்கு நிலையில் இருந்து சில ஏற்பாடுகளைத் தமிழ் அரசியல்வாதிகள் இணைத்திருக்கவேண்டும் என்று அவர் கூறினார்.

அவ்வாறு முன் யோசனையோடு செயற்பட்டு இருந்திருந்தால், இப்பொழுது ஒவ்வொரு ஆண்டும் நீதிமன்றம் ஏறும் நிலைமை ஒப்பீட்டளவில் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் அதி உயர் சட்டமாகிய யாப்பில் இருப்பதையே அதாவது 13 ஆவது திருத்தத்தையே முழுமையாக அமுல்படுத்தாத ஓர் அரசியல் பாரம்பரியமுடைய நாட்டில், நினைவு கூர்தல் பொறுத்து உருவாக்கப்படும் சட்ட ஏற்பாடுகள் எந்தளவுக்கு மதிக்கப்படும் என்ற கேள்வியும் இங்கு உண்டு.

ஆயினும் கூட்டமைப்பு நிலைமாறு கால நீதியின் பங்காளியாகச் செயற்பட்ட அக்காலகட்டத்தில், தென்னிலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக உழைத்த அக்காலகட்டத்தில், தமிழ் மக்களின் நினைவு கூரும் கூட்டுரிமை தொடர்பில் ஏன் முன்யோசனையோடு செயற்பட்டிருக்கவில்லை என்று மேற்படி சட்டவாளர் கேள்வி எழுப்பினார்.

அரசியல்வாதிகளாக உள்ள தமிழ்ச் சட்டவாளர்கள் இந்த விடயத்தில் மட்டுமல்ல நினைவு கூர்தல் சம்பந்தப்பட்ட வேறு ஒரு விடயத்திலும் பொருத்தமான, தாக்கமான விதங்களில் செயற்பட்டிருக்கவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அது என்னவெனில் படை முகாம்களாக மாற்றப் பட்டிருக்கும் துயிலுமில்லங்கள் பற்றிய விவகாரமே

1996 இல் யாழ். குடாநாடு முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின், கடந்த 28 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள ஒரு விடயம் இது .யாழ்..குடாநாட்டில் கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம் ஆகிய மூன்று துயிலுமில்லங்கள் படைத்தளங்களாக மாற்றப்பட்டன. அதுபோலவே 2009க்குப் பின் வன்னியில், கிளிநொச்சியில், தேராவில் துயிலுமில்லத்திலும் முல்லைத்தீவில் ஆலங்குளம், முள்ளியவளை, அளம்பில் ஆகிய துயிலுமில்லங்களிலும் படைக்கட்டுமானங்கள் உண்டு. மட்டக்களப்பில் தாண்டியடி துயிலுமில்லம், வவுனியாவில் ஈச்சங்குளம் துயிலுமில்லம் ஆகியவற்றில் படை முகாம்கள் உண்டு. மொத்தம் ஒன்பதுக்கும் குறையாத துயிலுமில்லங்களில் படைமுகாம்கள் உண்டு.

போரில் வெற்றி கொள்ளப்பட்டவர்களின் புதைமேட்டை அவமதிப்பது என்பது நவீன அரசியலில் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நடைமுறை. மன்னர்களின் காலத்தில் கூட துட்டகைமுனு தோற்கடிக்கப்பட்ட எல்லாளனுக்கு அநுராதபுரத்தில் ஒரு நினைவுத் தூபியைக் கட்டினான். அதைக் கடந்து போகின்றவர்கள் அதற்கு மரியாதை செலுத்தவேண்டும் என்றும் கட்டளையிட்டான். மன்னர் காலத்தில் பேணப்பட்ட அந்த அரசியல் மாண்பைக்கூட நவீன காலத்தில் இலங்கைத் தீவின் சிங்கள - பௌத்த அரசியல் பேணவில்லை.

தோற்கடிக்கப்பட்டவர்களின் புதைகுழிகளின் மீது வெற்றி பெற்றவர்கள் தமது படை முகாம்களைக் கட்டுவது என்பது எதிரியை இறந்த பின்னரும் தண்டிக்க விரும்பும் ஒரு கூட்டு மனோநிலையின் வெளிப்பாடுதான். இறந்த பின்னும் அவர்களை நிம்மதியாகத் துயில விடக்கூடாது. இறந்த பின்னும் அவர்களுடைய நெஞ்சை மிதித்துக் கொண்டு நடக்க வேண்டும் என்ற பழிவாங்கும் உணர்ச்சியை அது வெளிப் படுத்துகின்றது. போரில் உயிர்நீத்தவர்களின் மார்பின்மீது குந்தியிருப்பது என்பது போர் வெற்றியைக் கொண்டாடுவதில் உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா வரையறைகளையும் அவமதிக்கும் ஒரு நடைமுறைதான்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்குவதற்கான நிபுணர் குழு ஒன்றை உருவாக்கினார். அந்தக்குழுவினர் திலீபனின் நினைவு நாள்களின்போது யாழ்.கச்சேரியில் ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தினார்கள். யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இரண்டு சிங்கள நிபுணர்களும் அழகியல் துறைப் பேராசிரியர்கள். அவர்களிடம் இவ்வாறு துயிலுமில்லங்களில் படைத் தளங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு இறந்தவர்களையும் அவமதிக்கும் ஓர் அரசியல் இராணுவச்சூழலில், எப்படிப் பொதுவான ஒருநினைவுச்சின்னத்தை உருவாக்கலாம் என்றும் அவர்களிடம் கேட்கப்பட்டது.

இந்த விடயத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒரு விவகாரமாக எழுப்பியிருக்கவேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு உண்டு. கடந்த 14 ஆண்டுகளாக அதை அவர்கள் செய்திருக்கிறார்களா? குறிப்பாக நிலைமாறுகால நீதியின் பங்காளியாக கூட்டமைப்பு செயற்பட்ட காலகட்டங்களில் ஏன் அந்த விவகாரத்தை ஐ.நா.வில் எழுப்பவில்லை? ஏனைய உலகளாவிய மனித உரிமை அமைப்புகள் மத்தியில் எழுப்பவில்லை? அண்மையில் சிறீதரன் நாடாளுமன்றத்தில் இதுதொடர்பில் பேசியிருக்கிறார். அந்த உரையில் இதுதொடர்பான புள்ளிவிவரங்கள் உண்டு .

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நினைவு நாள்களைத் தத்தெடுக்க முற்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்த விடயத்தில் எந்தளவுக்கு அக்கறைகாட்டியிருக்கிறது? பெரும்பாலான கட்சிகள் இறந்த காலத்தைத் தத்தெடுக்க முயற்சிக்கின்றன. தமிழ் அரசியலில் பெரும்பாலானவர்கள் தங்களை இறந்த காலத்தின் வாரிசுகளாகக் காட்டிக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியாகக் காட்டிக்கொள்ளப் பார்க்கிறார்கள். துயிலுமில்லங்களை எப்படித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் மேற்சொன்ன விடயத்தில் அவர்கள் பயன் பொருத்தமான விதங்களில் அக்கறை காட்டியிருக்கிறார்களா?

அண்மையில் விசுவமடு தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்கக் கோரி ஒரு போராட்டம் இடம்பெற்றது. அந்தத்துயிலுமில்லத்தின் ஒரு பகுதி இப்பொழுதும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அதை விடுவிக்கவேண்டும் என்று போராடியது சரி. ஆனால் அந்தப் போராட்டத்தை மாவீரர் நாளுக்கு சில கிழமைகளுக்கு முன்னதாக முன்னெடுப்பது என்பது, வழமையான தமிழ் அரசியலின் மந்தத்தனத்தையே காட்டுகிறது.

இது துயிலுமில்லங்களை அல்லது நினைவுத் தூபிகளை குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக சென்று துப்புரவாக்குவதற்கு நிகரானது. கடந்த 15 ஆண்டுகளாக பெரும்பாலும் அதுதான் நடந்து வருகிறது. துயிலுமில்லங்களை நவம்பர் மாதங்களில் மட்டும் துப்புரவாக்குவதும், நவம்பர் மாதங்களில் மட்டும் அவற்றைப் புனிதமான இடங்களாக உருவகிப்பதும் சரியா? புனிதமான நினைவிடங்கள் என்றால் அவை ஆண்டு முழுவதும் பராமரிக்கப்பட வேண்டும். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் அப்படித்தான் அவை பராமரிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது எத்தனை துயிலுமில்லங்கள் அவ்வாறு தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படுகின்றன? அவ்வாறு பராமரிக்கத் தேவையான கட்டமைப்புகள், ஏற்பாடுகள் உண்டா? அப்படித்தான், மாவீரர்களின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உடலுறுப்புகளை இழந்த போராளிகள், யுத்த விதவைகள், யுத்த அநாதைகள் போன்றோரைத் தொடர்ச்சியாகப் பராமரிக்கும் கட்டமைப்புகள் எத்தனை உண்டு?

மாவீரர்களின் பெற்றோரை மாவீரர் மாதத்தில் மட்டும் அழைத்து அவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்குவதும் உதவிப் பொதிகளை வழங்குவதும் போதாது. அவர்களுக்கு தொடர்ச்சியாக உதவி வழங்க வேண்டும். அல்லது அவர்கள் உழைத்து சம்பாதிக்கக் கூடிய விதத்தில் பொருத்தமான முதலீடுகள் செய்யப்பட வேண்டும். அப்படித்தான் மாவீரர்களின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உடலுறுப்புக்களை இழந்த போராளிகள், யுத்த விதவைகள், யுத்த அநாதைகள்...போன்றோரின் விடயத்திலும். ஆனால் அவற்றுக்குரிய கட்டமைப்புகள் அதிகரித்த அளவில் இல்லை. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட கிழமையில் மட்டும் தியாகிகளையும் ,தியாகிகளின் குடும்பங்களையும், போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் கௌரவிப்பது அல்லது அவர்களுக்கு உதவி செய்வது என்பது ஒரு விதத்தில் அரசியல் சடங்கு தான். அதை அதற்குரிய புனிதத்தோடு விசுவாசமாகச் செய்வது என்று சொன்னால், அதைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். புனிதம் என்பதே தொடர்ச்சிதான். அதைத் தொடர்ச்சியாகச் செய்வது என்று சொன்னால், அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்படும் கொண்டாட்டங்களில் கோடிக்கணக்கான காசு புரள்கிறது. உதாரணமாக அண்மையில் சித்சிறீராமின் இசை நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட தொகை மிகப்பெரியது. இருபது லட்சம் கனேடிய டொலர். அதில் சிறு துளி போதும். மாவீரர்களின் குடும்பங்களையும் புனர்வாழ்வு பெற்ற போராளிகளையும் பராமரிப்பதற்கு. எனவே தமிழ் அரசியல்வாதிகள் காசு இல்லை என்ற ஒரு காரணத்தைக் கூற முடியாது. உரிய கட்டமைப்புகளை பொருத்தமான விதங்களில் உருவாக்கினால், காசை வெளியில் இருந்து எடுக்கலாம். நினைவு நாள்களுக்கும், நினைவுகூரும் நிகழ்வுகளுக்கும், நினைவிடங்களுக்கும் உரிமை கோரும் அரசியல்வாதிகள், இந்த விடயத்தில் நினைவு கூர்தலின் புனிதத்தைத் தொடர்ச்சியைப் பேணத்தக்க விதத்தில் கட்டமைப்புகளை உருவாக்குவார்களா? கட்டமைப்புகளை கட்சிசாரா பொதுக் கட்டமைப்புகளாக உருவாக்கினால். அது மேலும் பொருத்தமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிகேடியர் பானு

# மாவீரர் நினைவலைகள்:

## அறியாத தகவல்கள்

○ பிரதீபராஜா

விடுதலைப் போராட்டத்தில் களப்பலியான மாவீரர்களின் விவரங்களைத் தொகுத்து ஆவணமாக்கவேண்டும் என்ற முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர் அன்ரன் மாஸ்டர் எனப்படும் சிவகுமார். இவர்தான் விடுதலைப் புலிகளின் முதல் மாவீரரான லெப். சங்கர் காயமடைந்த போது தமிழீழத்தில் இருந்து சிகிச்சைக்காக அவரைத் தமிழகத்துக்கு அழைத்துச் சென்றவர்.

அன்றிலிருந்து இவர் விடுதலைப் போரில் வீரச்சாவடைந்தவர்களின் விவரங்களைத் தொகுத்து வந்தார். இவர் 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயக்கத்துக்கான படைத் துறைப் பணியகத்தை (Military Office) உருவாக்கி இயக்கத்தின் படைத்துறை மற்றும் பல்வேறு வளர்ச்சிகளுக்கு முன்னோடியாயிருந்தவர். விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்களிலும் பிற பணியகங்களிலும் பணிகளைத் தொடங்க முன்னர் களப்பலியான மாவீரர் கள் மற்றும் சாவடைந்த பொதுமக்களுக்குமாக பொது வான அகவணக்கம் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், வீரச்சாவடைந்த மாவீரர்களின் தொகுப்பை சகல விவரங்களுடன் (சொந்தப் பெயர், இயக்கப் பெயர், வீரச்சாவடைந்த சம்பவம் மற்றும் வீரச்சாவடைந்த தினம் என்பனவற்றை உள்ளடக்கிய) ஒவ்வொரு நாள் காலையிலும் வீரவணக்கம் செலுத்தும் நடைமுறையை முதன் முதலில் தனது பணியகத்தில் நடைமுறைப்படுத்தினார்.

இந்தப் பணியகத்தின் ஓர் அறையிலேயேதான் தேசிய தலைவர் அவர்களின் பணியகமும் அந்தக்காலத்தில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய நாள்களைப்போல் கணினி வசதிகள் அற்ற அந்தக் காலத்தில் பணியகத்தில் இருந்த தட்டச்சு இயந்திரத்தில் தான் மாவீரர் விவரங்கள் தொகுத்து ஆவணமாக்கப்பட்டன. அன்றைய காலத்தில் படைத்துறைப் பணியகத்தின் தட்டச்சாளர்களாக கவிஞர் காசி ஆனந்தன், தேவர் அண்ணா ஆகிய இருவரும் பணிபுரிந்தார்கள்.

A3 அளவுடைய காகிதத்தைக் கிடையாக (Land scape) வைத்து தேவர் அண்ணாவினாலே அந்த மாவீரர் விவரங்கள் தட்டச்சுச் செய்யப்பட்டன.

ஆரம்ப நாள்களில் வீரச்சாவடைந்த சகல மாவீரர்களின் விவரமும் ஒவ்வொரு நாள்களிலும் வாசிக்கப்பட்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. காலப்போக்கில் மாவீரர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது அவற்றை ஒவ்வொரு நாளும் காலையில் முழுமையாக வாசிப்பதற்கு நீண்ட நேரம் எடுப்பதனால், மாவீரர் விவரங்கள் மாதங்கள் ரீதியாகத் தொகுக்கப்பட்டு அந்தந்த மாதங்களில் ஒவ்வொரு நாளும் வாசித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நாளடைவில் தாயகத்துக்காக தம்மை ஆகுதியாக்கியவர்களின் தொகை மேலும் அதிகரித்தபோது நாளாந்த ரீதியாக வீரச்சாவு விபரங்கள் தொகுக்கப்பட்டு வாசித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

அக்காலத்தில் தமிழீழத்திலிருந்து தமிழகத்துக்கு தேசியத் தலைவரைச் சந்திக்க வந்த பல்வேறு மாவட்ட மற்றும் பிராந்திய தளபதிகளுக்கும் மாவீரர்களின் தொகுப்பின் படிகள் / பிரதிகள் வழங்கப்பட்டன.

அந்தத் தொகுப்பை அடிப்படையாக வைத்தே மாவீரர் விவரங்கள் பின்னர் தொகுக்கப்பட்டன.

(1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மணலாற்றில் ஆனந்தராஜா என்பவரால் எடுத்துவரப்பட்ட அடிப்படைக் கணனி (Basic Computer) ஒன்றில் இந்தத் தரவுகள் முதன் முதலில் கணினி உள்ளீடு செய்யப்பட்டன.)

▣ ▣ ▣

ஆரம்பத்தில் தலைமறைவு இயக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கினர். பகிரங்கமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் படையினரோ, காவல்துறையினரோ சுற்றிவளைத்து சந்தேகப்படக்கூடிய எவரையும் கைதுசெய்ய முடியும். எனவே வீரச்சாவடைந்த போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் முறையும் மிக அவதானத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது.

முதல் மாவீரரான சங்கரின் வீரச்சாவுச் செய்தி முதலாம் ஆண்டு நினைவேந்தல் காலத்திலேயே வெளிப்படுத்தப்பட்டது. இவர் காயமடைந்த வீட்டுக்கு விரைந்த இராணுவத்தினர் நித்தியானந்தன் - நிர்மலா தம்பதியரைக் கைது செய்திருந்தனர். இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளின்போது சங்கரின் மறைவு பற்றிய செய்தியை தமது விசாரணைக்கு ஆதாரமாக சுட்டிக்காட்டக்கூடும் என்று ஊகித்ததனால்தான் இவ்வாறு காலதாமதம் ஏற்பட்டது. இதன் பின்னர் நிகழ்ந்த லெப். சீலன் - ஆனந்த் மற்றும் செல்லக்கிளியம்மான் ஆகியோரின் வீரச்சாவுச் செய்திகள் இரு கட்டமாக வெளியிடப்பட்டன. முதன் முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை இக்காலத்தில்தான்.

கொள்கை ரீதியான சில பிரசுரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டபோதும் அவை அச்சிடப்பட்டவை. கையால் எழுதப்பட்ட இந்தச்சுவரொட்டிகள் அனைத்தும் அரியாலை - நாயன்மார்கட்டு பகுதிகளிலேயே தயார்ப்படுத்தப்பட்டன. முதலில் தலைவரின் வழிகாட்டலிலும், அவர் தமிழகத்துக்குப் பயணமான பின்னர், களத்துக்குப் பொறுப்பாக இருந்த பண்டிதரின் தலைமையிலும் இவ்வாறான அரசியல் பணிகளை மேற்கொண்டவருக்கு இங்கேதான் இப்பணிகளை மேற்கொள்ளமுடிந்தது. இவரது நெறிப்படுத்தலில் போராட்டத்தின்மீது விசுவாசமும் துடிப்பும் கொண்ட பல்வேறு கிராமங்களிலிருந்து இனங்காணப்பட்டவர்களை பணியில் ஈடுபடுத்தும் செயலில் நாதன் எனப்படும் கந்தையா பேரின்பநாதன் ஈடுபட்டார். (இவரே பின்னாளில் அனைத்துலக நிதிப் பொறுப்பாளராக விளங்கியபோது துரோகிகளால் பிரான்ஸில் சுட்டுக் கொல்லப்பட்டார்.)

போராட்டத்தின்மீது விசுவாசமும் துடிப்பும் கொண்ட பல்வேறு கிராமங்களிலிருந்து இனங்காணப்பட்டவர்களை பணியில் ஈடுபடுத்தும் செயலில் நாதன் எனப்படும் கந்தையா பேரின்பநாதன் ஈடுபட்டார். (இவரே பின்னாளில் அனைத்துலக நிதிப் பொறுப்பாளராக விளங்கியபோது துரோகிகளால் பிரான்ஸில் சுட்டுக் கொல்லப்பட்டார்.)


நாதன்

இப்பணிகளில் ஈடுபட்டோரில் ஒரு குழுவினரை மறு குழுவினருக்குத் தெரியக்கூடாது என்பதற்காக ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, அரியாலை, கலைமகள், சரஸ்வதி, நாயன்மார்கட்டு என்ற பெயர்களில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு வெவ்வேறு நேரங்களில் வரவழைத்து சுவரொட்டிகளைக் கையளித்து வந்தார். எல்லா இடங்களுக்கும் இவ்வாறு துவிச்சக்கர வண்டியிலேயே சென்று வருவார். யாராவது ஒரு தரப்பு பொலிஸாரிடமோ, படையினரிடமோ பிடிபட்டு விட்டால் சங்கிலித் தொடராக அனைவரும் பிடிபட்டுவிடுவர் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

காங்கேசன்துறைப் பகுதிக்குச் சென்றகுழுவினர் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருக்கும்போது திடீரென பொலிஸாரின் ஜீப் வந்துவிட்டது. அனைவரும் பிடிபட்டனர். அதில் வந்த தமிழ்ப் பொலிஸாரிடம் சுவரொட்டியில் என்ன எழுதியிருக்கிறது என்று பொறுப்பதிகாரி கேட்டார். வசனங்களோ புலிகளை நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்தும் வகையில் இருப்பதைக் கண்ணுற்ற தமிழ்ப் பொலிஸ்காரர் அந்த இளைஞர்களில் இருவரின் கன்னத்தில் பலமாக அறைந்தார். "ரியூட்டறி போஸ்ரர் ஒட்டுறதெண்டா பகலில ஒட்டுறதுதானே? ஏன்டா கள்ளர் மாதிரி ராவில திரியிறீங்கள்...? ஓடுங்கடா" என்று உரக்கக்கூவி சாமர்த்தியமாக அவர்களை விரட்டிவிட்டார். இவ்வாறு விரட்டப்பட்ட இளைஞர்களில் இருவர் பின்னாளில் போராளிகளாகி மாவீரர்களாகிவிட்டனர். லெப். பிரசன்னா (இரத்தினம் சதானந்தன், திருவையாறு, கிளிநொச்சி, 14.05.1985 இல் வில்பத்து காட்டில் படையினருடான மோதலில் விழுப்புண் அடைந்து சயனைட் உட்கொண்டு வீரச்சாவு) மேஜர் டயஸ் (மயில்வாகனம் தவராசா, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் 21.08.1989 இல், பருத்தித்துறையில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவு.

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
26 நவம்பர் 2023

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)



# மாவீரர்

முதலில் அம்பாறையிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக விளங்கியவர்) ஆகியோரே அன்று சுவரொட்டி ஒட்டும் போது தப்பித்தவர்களில் இருவர்.
அளவெட்டி முதலான இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டியோரில் ஒருவரான செல்லையா தில்லைச்சந்திரன் (நாவலர் வீதி யாழ்.) நேரு என்னும் பெயரில் போராளியாகி ஆவரங்காலில் பண்டிதரை இலக்கு வைத்து 09.01.1985 இல் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்தினார். இவ்வாறான பணிகளில் ஈடுபட்ட யாழ். கொழும்புத்துறையைச் சேர்ந்த கனகரத்தினம் செல்வகுமார் என்பவர் காந்தி என்ற பெயரில் போராளியாகி 23.12.1987 இல் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது மேஜர் முரளி முதலான மாவீரர்களுடன் ஆகுதியானார். இவருக்கு கப்டன் தரநிலை வழங்கப்பட்டது.
இந்தச் சுவரொட்டிகளைத் தயாரிக்கும் பணிகளுக்கு தமது குடுமபத்தினருக்குச் சொந்தமான வீடொன்றைப் பயன்படுத்த ஏற்பாடு செய்தவர் பின்னாளில் பல வரலாற்றுச் சமர்களுக்குத் தலைமை தாங்கினார். யாழ். கோட்டை, ஆனையிறவு பகுதிகளில் புலிக்கொடியை ஏற்றிய பிரிகேடியர் பானு தான் அவர். இவரும் கிளிநொச்சி வரை சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் கொண்டு சென்றவர்களில் ஒருவர். நாதன் மேற்கொண்ட பிரசுரங்கள் வெளியீடுகளை விநியோகிக்கும் பணிகளின்போது அவருடன் தொடர்பினை ஏற்படுத்திய ராஜன் பின்னாளில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரானார். திலீபனின் உண்ணாவிரதத்தின்போது பன்னிரு நாள்களும் அவருடன் கூடவே இருந்தவர் ராஜன்.
புலிகளின் தொடர்பு கிடைக்காமல் அவர்களோடு இணைவதற்குத் தேடித் திரிந்தோரில் சிலர் சுவரொட்டிகளில் உள்ள வாசகங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டுபோய் தாள்கள், மைகள், தூரிகைகளை தமது சொந்தச் செலவில் வாங்கி சுவரொட்டியாக்கினர். ஆர்வமிகுதியால் இதனைச் செய்திருந்தாலும் தன்னிச்சையாக இவ்வாறு நடந்து கொள்ள அனுமதிக்கமுடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு அனுமதித்தால் சமூகவிரோதிகள் தம்மைப் புலிகள் போலக் காட்டி தவறான செயலில் ஈடுபடக்கூடும் என எச்சரிக்கப்பட்டது. எனினும் ஆர்வமிகுதியினால் இவ்வாறு நடந்துகொண்டோரில் ஒருவர் குயிலன் (இராசரத்தினம் ரவீந்திரன் வீரச்சாவு 03.09.1986) என்ற பெயரில் போராளியாக இணைத்துக்கொள்ளப்பட்டார். பயிற்சியின் பின் இந்தியாவிலிருந்து திரும்புகையில் மாதகல் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார்.
விநியோகத்துக்காக நாதன் சுவரொட்டிகளை வைத்திருந்த வீட்டின் அம்மையார் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். இரவு சுவரொட்டிகளோடு குழுக்கள் புறப்பட்டவுடன், "பிள்ளையாரே! அம்மாளாச்சி எல்லாப் பிள்ளைகளும் சுகமாக வந்து சேரவேணும்" என்று சொல்லிச் சொல்லிக் கும்பிட்டுக் கொண்டு இருப்பார். இதை அறிந்த இவரது மகன் தமது பணியை முடித்துத் திரும்பியவுடன் சாமி அறையின் வாசலில் நின்று "எல்லாப் பிள்ளைகளும் வந்தாச்சு" என்று உரக்கச் சொல்லிக்கொண்டிருக்கும் வரை அவரது வழிபாடு தொடரும்.

▣ ▣ ▣

வீரச்சாவு தொடர்பான விடயங்களைக் குறிப்பி டும் போது ஆரம்பத்தில் அவரவர் சார்ந்த மதங்களைப் பொறுத்து இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டன. லெப். சங்கரின் வித்துடலுக்கு சமய முறைப்படி கொள்ளிவைத்து சிதையில் எரிக்கப்பட்டது. (கொள்ளிவைத்தவர் அப்பையா அண்ணா) முஸ்லிம் மாவீரரான உஸ்மான் - கிழங்கு என்பவரது வித்துடல் விதைப்பு யாழ். முஸ்லிம் மையவாடியில் மார்க்க முறைப்படி நடைபெற்றது. இங்கேயே கப்டன் பாரூக்கின் (கனீபா அக்கரைப்பற்று) வித்துடலும் விதைக்கப்பட்டது.
1990 ஏப்ரலில் ஏறாவூர் புன்னைக்குடா வீதியைச் சேர்ந்த றியாஸ் என்பவர் மாவீரரானார். இவரது வித்துடல் முஸ்லிம் மையவாடியிலேயே விதைக்கப்பட்டது. இந்திய இராணுவ காலத்தில் போராட்டத்தில் இணைந்து கொண்ட ஆளுமைமிக்க இந்த மாவீரரின் வித்துடலுக்கு 21 துப்பாக்கி வேட்டுகள் முழங்க வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்தநிகழ்வில் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் உரையாற்றினார்.
மன்னார் மாவட்டத் தளபதியாக விளங்கிய லெப். கேணல் விக்ரர் மற்றும் நாயுடு ஆகிய மாவீரர்களின் வித்துடல்கள் ஆட்காட்டிவெளியில் பொதுமக்களின் சவக்காலையிலேயே விதைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவெய்திய ஆரையம்பதியைச் சேர்ந்த மாவீரர் ஒருவரின் சிதைக்கு கிட்டு கொள்ளிவைத்தார். தாவடியில் விமானத் தாக்குதலில் வீரச்சாவடைந்த நாவலப்பிட்டியைச் சேர்ந்த லூக்காஸ் என்ற மாவீரருக்கும் இன்னொரு போராளியே கொள்ளி வைத்தார். தம்மை வெளிப்படுத்த முடியாத காலத்தில் வீரச்சாவெய்திய லெப். செல்லக்கிளியம்மானின் வித்துடல் இரகசியமாக ஓரிடத்தில் விதைக்கப்பட்டது. இதேபோல இந்திய இராணுவத்தின் காலத்திலும் சிலரை எரிக்காமல் விதைக்க வேண்டியேற்பட்டது.
பின்னர் துயிலும் இல்லங்களை அமைக்க ஏற்பாடு செய்வது என்ற முடிவுக்கு வந்த பின்னர் ஒரு மேடையில் வித்துடல் வைத்து எரிக்கப்பட்டது. அக்காணொலியை கண்டபின்னரே எரிப்பதனை விட விதைப்பதுதான் பொருத்தமானது என்ற முடிவுக்கு வந்தார் தலைவர். இது சகல சமயத்தவருக்கும் பொதுவானது என்று முடிவாயிற்று. சமாதான காலத்தின் பின் முகமாலை முன்னரங்கில் வீரச்சாவெய்திய இராமநாதபுரத்தைச் சேர்ந்த முஸ்லிம் மாவீரரின் வித்துடல் கிளிநொச்சி துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. இதேபோல ஆழஊடுருவும் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய மட்டக்களப்பைச் சேர்ந்த முஸ்லிம் மாவீரரின் வித்துடலும் இதே துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. மகன் கட்டளைத்தளபதியாக முதன்மைச்சுடரேற்றிய அதே மேடையில் இரு மாவீரர்களின் (பிரிகேடியர் தீபன், லெப்.கேணல் கில்மன்) தந்தையாக இறுதி யுத்தத்தின் பின்னர் வேலாயுதபிள்ளை அவர்கள் நின்று பிரதான சுடரை ஏற்றிய வரலாறும் இதே துயிலுமில்லத்தில் நிகழ்ந்தது. சிங்களப் பெண்மணியின் வாரிசுகளின் வித்துடல் முழங்காவில் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட வரலாறும் உண்டு. இவ்வாறாக மாவீரர் தொடர்பான பல்வேறு வகையான தகவல்கள் உண்டு.
வரலாறு தெரியாமல் மன்னாரில் நாம் ஏற்கனவே வித்துடல்களை விதைக்கும் மரபைக் கொண்டிருந்தோம் என்றும், மணலாற்றில் நாம் முதன்முதலில் விதைக்கும் மரபைத் தொடங்கினோம் என்றும் தாங்களும் குழம்பி மாவீரர் குடும்பங்களையும் குழப்பும் வீண் முயற்சிகளில் ஈடுபடவேண்டாம் என்று விநயமாக வேண்டுகிறோம். செல்லக்கிளியம்மானின் வித்துடல் தனியே ஓரிடத்தில் விதைக்கப்பட்டது என்பதை மீண்டும் சுட்டிக்காட்டுகின்றோம். தங்கள் தங்கள் பிள்ளைகளின் நினைவிடத்தில் மாவீரரின் பெற்றோர் சுடரேற்றி மனப்பாரத்தை இறக்கி ஏதோ ஒருவகையில் சாந்தியடைய வைக்க எந்தவகையில் உதவலாம் என நாம் கூடிச் சிந்திப்போம். எமது பிள்ளைகள் களத்தில், முகாமில் எவ்வளவு நட்புடன் பழகியிருப்பார்களோ அதற்குக் குறையாத வகையில் மாவீரர் குடும்பங்கள் உணர்வில் ஒன்றிக் கலந்திருப்போம்.



வித்துவான் குமாரசாமி

# வித்துவான் சி. குமாரசாமி

## நூறாண்டு கடந்தும் மாறா நினைவுகள்

வெள்ளைவேட்டி, நஷனல் உடை, வேகநடை, புன்னகை தவழும் முகம், கருணைபொழியும் கண்கள், கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளம், மன்னிக்கும் தன்மை, அன்புள்ளம், எளிமையான வாழ்வு, உயர்வான உலகியல் நோக்கு என்று மானிடத்தின் உயர்விழுமியங்களின் கூட்டுருவாகத் திகழ்ந்தவர் வித்துவான் குமாரசாமி.
மணிபல்லவத்தீவு என்று அழைக்கப்பட்ட நயினாதீவில் சின்னத்தம்பி - நல்லமுத்து தம்பதியினருக்குப் புதல்வனாக வித்துவான் குமாரசாமி , 1923.11.23ஆம் திகதி வந்துதித்தார். இந்தத் தீவு சித்தர்களும், ஞானிகளும், புலவர்களும் வாழ்ந்த சிறப்புகள் பெற்ற திருத்தலமாகும். இங்கு முத்துக்குமாரசாமி, நாகமணிப்புலவர், இல்லறஞானி க. இராமச்சந்திரன் போன்ற ஆளுமைகள் தோன்றினார்கள்.
சிறுவயதில் கேள்வி ஞானமுறையில் தாயாரிடம் மகாபாரதம் , இராமாயணம், விடுகதைகள், சிலேடைப்பாடல்கள் போன்றவற்றைக் கற்றதனால் இவர் தமிழிலும் சைவத்திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இவர் தமது ஆரம்பக் கல்வியை ஸ்ரீநாகபூஷணி வித்தியாசாலையில் (முன்னர் தில்லையம்பல வித்தியாசாலை) பெரியவாத்தியார் என அனைவராலும் அழைக்கப்பட்ட ச.நா.கந்தையாவிடம் கற்றார். அவர் எழுத்துகளை உறுப்பமைய எழுதவேண்டும் என்றும் அனைவரும் கல்வியில் மேம்பட வேண்டும் என்று அக்கறைகாட்டியதால் அவரிடம் கற்ற மாணவர்கள் பலர் பண்டிதர்களாகவும் புலவர்களாகவும் ஆசிரியர்களாகவும் உருவாகினர்.
பின்னர் திருநெல்வேலி சைவப் பாடசாலையிலும் தொடர்ந்து திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் கற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். வித்துவான் புங்குடுதீவு மகா வித்தியாலயம் , கொழும்பு கிராண்ட்பாஸ் மகா வித்தியாலயம், மஹவத்த மகா வித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, நயினாதீவு மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வவுனியா மகா வித்தியாலயம், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் பணியாற்றினார். இந்தக் காலத்தில் இவரிடம் கற்ற பலர் இப்போது ஆசிரியர்களாகவும் விரிவுரையாளராகவும் பேராசிரியர்களாகவும் தமிழ் ஆர்வம் கொண்டவர்களகவும் விளங்குகின்றனர். வித்துவான் குமாரசாமி 1971 இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றி 1983 இல் ஓய்வுபெற்றார். இவர் தமிழ், சைவம், கணிதம், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், விவசாயம், வாணிபம் , சோதிட சாஸ்திரம் முதலியவற்றில் வல்லுநராகத் திகழ்ந்தார். ஓய்வுக்காலத்தில் கம்பன்கழகத்தில் கம்பராமாயண வகுப்புகள், நல்லை ஆதீனத்தில் பண்டிதர் வகுப்புகள், ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தில் தமிழ் வகுப்புகள் என்பவற்றை நடத்தி தமிழ் வளர்க்கப்பாடுபட்டார். அத்துடன் பட்டிமன்றம், கவியரங்கம், வழக்காடு மன்றம் என்பவற்றிலும் பங்குபற்றி தன் ஆற்றலை வெளிப்படுத்தினார். பின்னர் கொழும்பு சென்று அங்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சைவநற்சிந்தனை, ஞானக்களஞ்சியம், நடைமுறை வாழ்க்கைத் தத்துவ நிகழ்ச்சிகளில் பங்குகொண்டார். தேசிய கல்வி நிறுவன கல்விச் சேவையில் விரிவுரைகளையும் நடத்தினார். இந்தக் காலத்தில் ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகிய நூல்களுக்கு உரையெழுதியதோடு, குழந்தைப்பாடல், குசேலர் சரிதம், அரிச்சந்திரன் இலக்கணநூல், நவராத்திரித் தோத்திரப் பாமாலைத் தொகுப்பு என்பனவற்றை பதிப்பிக்கவும் செய்தார்.
நூற்றாண்டு கடந்தும் தமிழாக வாழும் பேராசானின் நினைவுகள் என்றும் எம்மவரிடம் நிலைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org